பக்கங்கள்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 8 சனிக்கிழமை (24.09.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :302

## தனித்திருந்த வயோதிப மாதுவை தாக்கிக் கொன்றுவிட்டு கொள்ளை!



### கொக்குவில் மேற்கில் கொடூரச் சம்பவம்

யாழ்ப்பாணம்,செப்.24

வீட்டில் தனித்திருந்த வயோதிபப் பெண் ஒருவரை தலையில் உலக்கை கொண்டு தாக்கி கொன்றுவிட்டு அவரது தங்க நகைகள் அபகரிக்கப்பட்டிருக்கின்றன. தலையில் பலமாகத் தாக்கப்பட்டதில் அந்தப் பெண் அவ்விடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தக் கொடூரக் கொள்ளைச் சம்பவம் கொக்குவில் மேற்கு, ஆடியபாதம் வீதியில் நேற்று நண்பகல் இடம்பெற்றிருக்கிறது.

வீட்டில் இருந்த ஏனையோர் அயல்வீட்டில் நடைபெற்ற அந்தியேட்டி வைபவம் ஒன்றில் பங்குபற்றச் சென்றிருந்தனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் தடுத்துவைக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவன் விடுவிப்பு

### மாணவர் குழு அங்கு திரண்டு மீட்டுவந்தது

யாழ்ப்பாணம்,செப்.24

பளையிலிருந்து முகமாலை ஊடாக யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த - யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர் ஒருவர் முகமாலை இராணுவச் சோதனைச் சாவடியில் வைத்து நேற்றுப் படையினரால் வழிமறிக்கப்பட்டார். விசாரணைக்காக அவர் கைதுசெய்யப்பட்டார் எனக் கூறப்பட்டது.

இதையடுத்து, மினிபஸ்களில் உடனடியாக முகமாலை சோதனைச் சாவடியை நோக்கிச் சென்ற - பல டசின் பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்ட - குழு ஒன்று நேரடியாக இராணுவ விசாரணைப் பிரிவிற்குள் நுழைந்தது. தடுத்துவைக்கப்பட்ட மாணவரை அக்குழு மீட்டுக்கொண்டு வந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

காலை 7.45 மணியளவில் வழிமறிக்கப்

(16 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் வாக்களிப்புக்கு கொத்தணி நிலையங்கள்

## கடந்த தேர்தல்கள் போன்றே இந்தத் தடவையும் ஏற்பாடு



கொழும்பு, செப்ரெம்பர் 24

* வடக்கு - கிழக்கில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிமக்கள் வாக்களிப்பதற்கு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் கொத்தணி நிலையங்கள் அமைக்கப்படும்.
* ஆழிப்பேரலையால் இடம்பெயர்ந்த மக்களின் வாக்களிப்புக்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்படும்.
* வாக்களிப்பு சமயம் மோசடி இடம்பெற்றால் அப்பகுதியில் மீண்டும் வாக்கெடுப்பு நடத்தப்படும்.
* தேர்தல் குளறுபடிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.
* ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளை வழமைபோல வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பர்.

- எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இத்தகைய நடவடிக்கைகளை எடுக்கத் தாம் தீர்மானித்திருக்கிறார் எனத் தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க நேற்றுத் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் குறித்தான தகவல்களை அறிவிக்கும் வகையில் தேர்தல்கள் திணைக்களத்தில் செய்தியாளர் மாநாடொன்றைக் கூட்டிய தேர்தல் ஆணையாளர் அரசமைப்பின் 17ஆவது திருத்தச் சட்டத்தில் பல குறைபாடுகள் இருப்பதாகவும் சாடினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

(16 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரால் பல்கலை. மாணவன் வழிமறிக்கப்பட்டமைக்கு கண்டனம்!

யாழ்ப்பாணம்,செப்.24

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத் தலைவர் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த சம்பவத்தை யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக ஒன்றியத்தால் விடுக்கப்பட்ட அறிக்கையில் உள்ளதாவது:-

யாழ்ப்பாணம் திரும்பிக்கொண்டிருந்த வேளை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத் தலைவர் முகமாலையில் வைத்துப் படையினரால் வழிமறிக்கப்பட்டு கடுமையாக மிரட்டப்பட்டார். அவருக்குப் படையினர் பல அசௌகரியங்களையும் ஏற்படுத்தியுள்ளனர். தான் ஒரு பல்கலைக்கழக மாணவன் என்று கூறியபோதும் படையினர் அதற்குரிய அந்தஸ்தினை வழங்காது மிகவும் கீழ்த்தரமான முறையில் நடத்தியுள்ளனர். சம்பவ இடத்தில் நின்ற தமிழ் மாணவர் ஒன்றிய உறுப்பினர்கள் படையினரிடம் நீங்கள் செய்வது முறையல்ல என்பதை சுட்டிக்காட்டியபோதும் அவர்களை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மலையகப் பகுதிக்கான தலைவராக எஸ்.பிக்கு ஐ.தே.கட்சியில் புதிய பதவி

கொழும்பு, செப். 24

ஐக்கிய தேசியக் கட்சியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் பதவி தொடர்பாக எழுந்த பெரும் சர்ச்சையினையடுத்து தற்போது சிறைவாசம் அனுபவித்துவரும் எஸ்.பி திஸநாயக்கவிற்கு 'மலையகப் பகுதிக்கான தலைவர்' என்ற புதிய பொறுப்பை வழங்க ஐக்கிய தேசியக் கட்சித் தலைமை தீர்மானித்திருக்கிறது.

முன்னதாக நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் பதவியிலிருந்து தம்மை நீக்கி அந்த இடத்திற்குக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நவீன் திஸநாயக்கவை நியமிக்க ஐ.தே.க தலைமை எடுத்திருந்த முடிவை எஸ். பி. திஸநாயக்க கடுமையாக ஆட்சேபித்திருந்தார். இத

(16 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சு முயற்சியிலும் அரசு மிகத் தீவிரமான ஈடுபாடு

### அமைச்சரவைப் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு, செப்.24

ஜனாதிபதித் தேர்தலுக்கான தீவிர ஏற்பாடுகள் இடம்பெற்று வரும் அதேவேகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசு நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுகளுக்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்விவகாரம் தொடர்பாக அரசுத் தரப்புப் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் நோர்வேத் தூதரக அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினர். பேச்சுக்கான ஏற்பாடுகளை முடியுமானவரை விரைந்து செய்து தருமாறு அவர்கள் நோர்வேத் தரப்பைக் கேட்டுக்கொண்டனர்.

-இப்படி அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா நேற்றுத் தகவல் வெளியிட்டார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிப்பதற்காக நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின்போதே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள்

(16 ஆம் பக்கம் பார்க்க)

### பிரதமருக்கு எதிரான விடயத்தை விசாரிக்க இருந்த

## கொழும்பு கோட்டை நீதிவான் நேற்றுத் திடீரென இடமாற்றம்

கொழும்பு, செப்.24

ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் கட்சி வேட்பாளராகப் போட்டியிடும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் தொடர்புபடுத்திப் பேசப்படும் 'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' ஊழல் விவகாரத்தை விசாரணை செய்யவிருந்த நீதிமன்றத்தின் நீதிவான் அதற்கு ஐந்து நாள்களுக்கு முன்னர் - நேற்று - திடீரென இடம்மாற்றம் செய்யப்பட்டார்.

கொழும்பு கோட்டை நீதிவானும், மேலதிக மாவட்ட நீதிபதியுமான சரத் சி கருணாரத்னவையே உடனடியாக நடைமுறைக்கு வரக் கூடியதாக நேற்று திடீர் இடமாற்றம் செய்தது நீதிச் சேவைகள் ஆணைக்குழு.

அவர் கொழும்பு மேலதிக மாவட்ட நீதிவானாக இடமாற்றம் செய்யப்பட்டார். தற்போது அவிசாவளை நீதிவானாக இருக்கும் நாமல் பலல்லே கொழும்பு கோட்டை நீதிவானாக உடனடியாக நடைமுறைக்கு வரக் கூடியதாக இடமாற்றம் செய்யப்பட்டார்.

நேற்றுமுன்தினம் கூடிய நீதிச்சேவை ஆணைக்குழு இந்த இடமாற்ற முடிவை எடுத்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இ.தொ.காவின் 19 அம்ச நிபந்தனைகளை ரணில், மஹிந்த இருவருமே ஏற்றுள்ளனராம்!

### யாரை ஆதரிப்பது என்ற முடிவு தாம் நாடு திரும்பிய பின்னரே என்கிறார் ஆறுமுகனார்

கொழும்பு,செப்.24

"இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் 19 அம்சக் கோரிக்கைகளையும் ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக்கொண்டுள்ளது எனக் கூறப்படுவதற்காக ஜனாதிபதித் தேர்தலில் அக்கட்சியை ஆதரிப்பதற்கு நாம் முடிவெடுத்துவிட்டோம் என்ற அர்த்தம் ஏதுமில்லை. அத்தகைய தீர்மானம் எதையும் நாம் எடுக்கவில்லை. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் எமது கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார்தானே. எனவே, நான் நாடு திரும்பியவுடன் இது

(16 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பொங்குதமிழ் ஏற்பாடுகள் களைகட்டுகின்றன இன்று முதல் எழுச்சி நாள்கள் பிரகடனம்

யாழ்ப்பாணம்,செப்.24

எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ்.மருத்துவ பீட மைதானத்தில் இடம்பெறவிருக்கும் பொங்குதமிழ் - 2005 நிக்ழ்வுக்கான ஏற்பாடுகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

லட்சக்கணக்கான மக்கள் ஒன்று திரளவுள்ள இந்த நிகழ்வுக்கு முன்னோடியாக மக்களைத் தயார்ப்படுத்தும் வகையில் இன்று சனிக்கிழமை முதல் எதிர்வரும் வியாழன் வரையான தினங்கள் எழுச்சி நாள்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதாக பொங்கு தமிழ் ஏற்பாட்டுக்குழு தெரிவித்திருக்கின்றது.

இந்த எழுச்சி நாள்களில் எழுச்சி கீதங்களை இசைபரப்பியும் பொது இடங்களை சிவப்பு - மஞ்சள் கொடிகளால் அலங்கரித்தும் மாபெரும் எழுச்சியை வெளிப்படுத்துமாறும் கேட்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர் குழுக்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் மாணவர்கள் ஏற்கனவே குழுக்களாக பொங்குதமிழ் பிரசாரப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

பொது இடங்களிலும் பொதுப் போக்குவரத்து வாகனங்களிலும் பொங்குதமிழ் பதாகைகள் கட்டப்பட்டுள்ளன.(ஐ-12-15-17)

# செயற்றிட்டப் பயிற்சி நெறி

கொழும்பு மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பின் (CHA) அனுசரணையுடன் சமூக அபிவிருத்தி மன்றம் நடத்தும் சமாதானமும் அபிவிருத்திக்குமான செயற்றிட்டப் பயிற்சி நெறி இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.சமூக அபிவிருத்தி மன்றத்தில் இடம்பெறவுள்ளது.

மன்றத் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சமாதானமும் அபிவிருத்தியும் என்ற தலைப்பில் அருட்தந்தை அ.இ.பேணாட் அடிகள் கருத்துரை நிகழ்த்துவார்.

பெண்களும் சமாதானமும் என்னும் தலைப்பில் ரி.இருதயராணி கருத்துரை நிகழ்த்துவார்.

தொடர்ந்து அபிவிருத்திக்கு சமாதானம் தேவையா? இல்லையா என்னும் தலைப்பில் பட்டிமன்றம், கலைநிகழ்வுகள் குழு ஆய்வுகள் என்பன இடம்பெறும். (3-204)

# தனியார்துறை ஊழியருக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வு!

## அதற்கான சட்டம் நேற்று நிறைவேற்றம்

தனியார்துறை ஊழியர்கள் அனைவருக்கும் ஆயிரம் ரூபா சம்பள உயர்வு சட்டரீதியாக வழங்குவதற்கு வகைசெய்யும் சட்டம் நேற்று நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

இந்தச் சம்பள உயர்வு ஓகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் எனத் தொழில் உறவுகள் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் அமைச்சர் அதாவுட செனவிரத்ன நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

சம்பள உயர்வை வழங்க மறுக்கும் தொழில் தருநர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் தொழில் ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் அரச ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்ட 2,500 ரூபா சம்பள உயர்வுக்கு ஈடாகத் தனியார் துறை ஊழியர்களுக்கும் சம்பள உயர்வை வழங்குவதற்கான சட்ட மூலத்தின் மீதான விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

விவாதத்திற்குப் பதில் அளித்த அமைச்சர் அத்தாவுட செனவிரத்ன மேலும் கூறியதாவது:-

தனியார்த்துறை ஊழியர்கள் அனைவருக்கும் ஆயிரம் ரூபா சம்பள உயர்வு ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் வழங்கப்படும். அதனை வழங்க மறுக்கும் தொழில் அதிபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்புதிய சட்டத்தின் மூலம் இருபதாயிரம் ரூபாவுக்கு மேற்படாத சம்பளத்தைப் பெறும் சகல தனியார்துறை ஊழியர்களுக்கும் தலா ஆயிரம் ரூபா சம்பள உயர்வுகிட்டும்.

சில துறைகளில் தமது வசதிக்கேற்ப கூட்டு ஒப்பந்தங்களை செய்துகொண்டுள்ளனர். அவற்றைக் குழப்ப நாம் விரும்பவில்லை.

கூட்டு ஒப்பந்தங்களின்மூலம் பெற்றுக் கொண்ட நன்மைகளை இவர்கள் தொடர்ந்தும் அனுபவிக்க முடியும். இவர்களை இந்தப் புதிய சட்டம் கட்டுப்படுத்தாது.

கடந்த காலங்களில் தொழில் அதிபர்கள் சம்பள உயர்வை வழங்க மறுத்தபோது முன்னாள் நிதி அமைச்சர்களான கலாநிதி என்.எம்.பெரேரா, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஆகியோர் சட்டத்தின் மூலம் சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுத்துள்ளனர்.

இதன் அடிப்படையிலேயே வரவு - செலவுத் திட்டத்தில் உறுதியளித்ததன்படி தனியார்துறை ஊழியர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வை வழங்க இப்புதிய சட்டத்தை சமர்பித்துள்ளோம். - என்றும் அமைச்சர் அதாவுட செனவிரத்ன கூறினார். (ஐ-க)

# சாவகச்சேரி நகர அபிவிருத்திக் கூட்டம்

சாவகச்சேரி நகர அபிவிருத்தி தொடர்பான விசேட கூட்டம் நேற்றுக்காலை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் யாழ். அரச அதிபர் க.கணேஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த விசேட கூட்டத்தில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சிரேஷ்ட ஆலோசகர் எஸ்.சிவதாசன், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகளான இந்திரசிறீ குணதிலக பண்டார பந்துசேன, ரஞ்சித் பெர்னாண்டோ - ஆரியதாஸ, யாழ். பிராந்திய அதிகாரி எஸ்.இராஜநாயகம், யாழ். செயலக திட்டமிடல் பணிப்பாளர் க.கேதீஸ்வரன், தென்மராட்சி பிரதேச செயலர் செ.சிறிநிவாசன், சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், சாவகச்சேரி பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் சாவகச்சேரி நகர அபிவிருத்தி தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. (ஐ-9-31-117)



சாவகச்சேரி அபிவிருத்தி தொடர்பான விசேட கூட்டத்தில் ரவிராஜ் எம்.பி. உரையாற்றுகிறார். (படம்: சாவகச்சேரி செய்தியாளர்.)

# கிராம அபிவிருத்தித் திணைக்கள கண்காட்சி மத்திய கல்லூரியில் நேற்று ஆரம்பமானது

## இன்றும் தொடர்ந்து நடைபெறும்

யாழ்ப்பாணம்,செப்.24

வடக்கு -கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மாதர் அபிவிருத்தி நிலைய உற்பத்திப் பொருள்களின் கண்காட்சி நேற்று யாழ்.மத்தி கல்லூரியில் ஆரம்பமாகியது.

கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வு நேற்றுக் காலை வைபவரீதியாக நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு வடக்கு- கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் வீ.குமாரசிங்கம் தலைமை வகித்தார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் நாடாவினை வெட்டி கண்காட்சியை ஆரம்பித்துவைத்தார்.

இதில் கரவெட்டிப் பிரதேச செயலாளர் எஸ்.சத்தியசீலன், யாழ்.செயலக பிரதி திட்டப் பணிப்பாளர் கே.குணாளசிங்கம், நல்லூர் பிரதேச செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் எஸ்.ரவீந்திரசர்மா உட்பட நூற்றுக்கணக்காணோர் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த மகளிர் அபிவிருத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

மணையியல், பூவேலை போன்ற பல்வேறு வகையான உற்பத்திப் பொருள்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

தமது உற்பத்திகள் தொடர்பான விளக்கங்களை தமிழ், முஸ்லிம், சிங்கள மகளிர் அமைப்பு நிலையத்தின் மாணவிகள், ஆசிரியர்கள் வழங்கிவருகின்றனர்.

இந்தக் கண்காட்சி இன்றும் தொடர்ந்து நடைபெறும்.

நேற்று ஆரம்பமான கண்காட்சியினை நூற்றுக் கணக்கானோர் பார்வையிட்டனர் என்றும் -

கண்காட்சியை காலை 7 மணி தொடக்கம் மாலை வரை பார்வையிடலாம் என்றும்- கிராம அபிவிருத்தித் திணைக்கள அதிகாரி ஒருவர் கூறினார்.

*(படங்கள் 3ஆம் பக்கத்தில்)*

(எ-7)

# அதிரடி 'பட்ஜெட்' அறிவிப்புகள் மூலம் மக்களைக் கவர்ந்து வாக்குகளை அள்ளிச் சுருட்டத் தயாராகிறார் பிரதமர் மஹிந்த!

கொழும்பு, செப்.24

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்புக்குச் சரியாக ஒருவார காலம் இருக்கக்கூடிய சூழ்நிலையில், வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் தீர்மானித்திருக்கும் அரசு இதன்மூலம் மக்களின் அபிமானத்தை வென்றெடுக்கக்கூடிய 'தேர்தல் பட்ஜெட்' ஒன்றைச் சமர்ப்பித்து, அந்த மாயாயாலத்தின் மூலம் வாக்குகளை அள்ளிச் சுருட்டுவதற்குத் திட்டங்களை வகுத்து வருவதாகத் தெரிகிறது.

இதன்படி, மக்களுக்கான அதிகளவு மானியங்களும் நிவாரணங்களும், சலுகைகளும் இந்த வரவு - செலவுத் திட்ட அறிவிப்பில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் அரசு வழங்கிய மானியம் மற்றும் நிவாரணத்தினால் ஏற்கனவே அரசின் நிதி நிலைமை தாக்கத்திற்குள்ளாகியுள்ளது. கஜானா காலியாகியுள்ளது.

ஆனாலும், வெளிநாட்டு நிதியுதவிகளை அடிப்படையாகக் கொண்டு இந்த வரவு - செலவுத் திட்டத்தில் அதிக மானியங்களையும், உதவிகளையும் வாரியிறைக்க அரசு திட்டமிடுவதாகத் தெரிகிறது.

ஏற்கனவே சீன அரசு, இலங்கையின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காகப் பல ஆயிரம் கோடி ரூபாவை இலகு கடனடிப்படையில் வழங்குவதற்கு முன்வந்துள்ளதாகவும், இதன் பின்னணியில் ஜே.வி.பியின் முக்கியஸ்தர்கள் செயற்படுகின்றனர் எனவும் செய்திகள் வெளிவர ஆரம்பித்திருக்கின்றன.

இவ்வாறான உதவிகளை அடிப்படையாகக் கொண்டு அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு, அத்தியாவசியப் பொருள்களுக்கான விலை குறைப்பு, விவசாயிகளுக்கான மானியம், எரிபொருள் விலை குறைப்பு, கைத்தொழிலாளர்களுக்கான சலுகைகள், வறுமை நிவாரணத் திட்டங்கள் போன்ற பல மக்கள் மனங்கவரும் திட்டங்களை அரசு இந்த வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக அறிவிக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலொன்று நெருங்கிய நிலையில் அரசினால் சமர்ப்பிக்கப்படவுள்ள இந்த வரவு - செலவுத் திட்டம் தேர்தலில் பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமர் மஹிந்த, இந்த வரவு - செலவுத் திட்டத்தைத் தமது 'வாக்கு அள்ளும்' முயற்சிக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் வகைகள் குறித்து சம்பந்தப்பட்ட துறையினருடன் விரிவாக ஆராய்ந்து வருகின்றார் என்றும் கூறப்பட்டது. (ஐ-க)



ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தில் புதிய பரிவர்த்தனை நிலையம் நேற்று திறந்துவைக்கப்பட்ட பின்னர் எடுக்கப்பட்ட படங்கள் இவை.
ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுகி அனான் உரையாற்றுவதை முதல் படத்தில் காணலாம்.
ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் வடமாகாணத் தலைவர் வி.யோகேந்திரன், ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் பிரதம இயக்குநர் றொட்றிக்கோ, செயல்திட்ட அதிகாரி ஜெயதிலகா, புதிய இணைப்பு அதிகாரி லயனல், பரிமாற்றத்திட்ட அதிகாரி லீலா ரட்ண் ஆகியோரையும் -
நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். (படங்கள் - பிரபா)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் – 222 2030, 222 2083, 222 3837.

## சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைக்கு உரிமையோடு காத்திருக்கும் தமிழர்கள்

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு நீடித்து நிலைக்கக்கூடிய சமூகத் தீர்வு ஒன்றைக் காணும் முயற்சிகளை இலங்கை அரசு தொடர்ந்தும் புறந்தள்ளி, அதில் பின்னடிப்பு செய்யுமானால், சந்தேகத்துக்கு எவ்வித இடமும் வைக்காமல் தமிழ் மக்களின் சுயநிர்ணயப் போராட்டத்திற்குப் பூரண அங்கீகாரத்தைச் சர்வதேச சமூகம் வழங்கவேண்டும்.

இவ்வாறு கோரியிருக்கின்றனர் வடக்கு - கிழக்கு தமிழர்களை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் 22 உறுப்பினர்களும்.

தமது நியாயமான, சட்டபூர்வமான, அரசியல் அபிலாஷைகளுக்காகப் போராடிவரும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயத் தீர்வுகாண இலங்கை அரசை சர்வதேச சமூகம் தகுந்த அழுத்தம் கொடுத்துத் தூண்டவேண்டும் என்றும் அவர்கள் கூட்டாக ஒப்பமிட்டுக் கோரியிருக்கிறார்கள்.

தற்போதைய அமைதி முயற்சிகள், எப்படி சிங்கள தேசத்தால் மோசடியான முறையில் சீரழிக்கப்பட்டன என்பதையும், யுத்தநிறுத்த உடன்பாட்டில் கூறப்பட்ட கடப்பாடுகளைச் சிங்கள அரசு நிறைவுசெய்யாமல் எவ்வாறு புறந்தள்ளியது என்பதையும் விலாவாரியாக - விளக்கமாக - இது சம்பந்தமாகத் தாம் வெளியிட்ட கூட்டறிக்கை வாயிலாகப் புட்டுப்புட்டு வைத்திருக்கின்றார்கள் அவர்கள்.

இதேசமயம், தமிழரின் உரிமைக்கான போர் தொடர்பான எழுச்சிக் குரல்கள் தமிழ் அரசியல்வாதிகளிடமிருந்து மட்டுமல்லாமல், தமிழர் தரப்பில் சிவில் மற்றும் மதத் தலைவர்களிடமிருந்தும் இப்போது வீச்சாக வெளிப்படத் தொடங்கியிருக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் குழு விடுத்தது போன்ற அறிக்கைகளைத் தமிழர் தரப்பில் உள்ள வெகுஜன அமைப்புகள் மட்டுமன்றி, தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன், கத்தோலிக்கத் திருச்சபையின் யாழ். மறை மாவாட்ட ஆயர் வண.தோமஸ் செளந்தரநாயகம் போன்றோரும் கூட வெளியிட்டு வருகின்றனர் என்பது கவனிக்கத்தக்கது.

''ஏறத்தாழ பதினெண்ணாயிரம் தமிழ் பேசும் இளைஞர், யுவதிகள் தமது இளமைக்கால மகிழ்ச்சிக் கனவுகளை எல்லாம் மழுங்கடித்துவிட்டு தமது மக்கள் தன்மானத்துடன் வாழவேண்டும் என்று தமது இன்னுயிரை உரிமைக்கான போராட்டத் தீயில் ஆகுதி செய்துள்ளனர். இவர்கள் எல்லாம் வீணாக மடிந்துபோகவில்லை. அவர்களுடைய இலட்சியக் கனவுகள் நிறைவேறவேண்டும்.'' - என்று வலியுறுத்துகின்றார் பேராயர் கலாநிதி ஜெபநேசன்.

இதேசமயம் -

''தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையையும், தன்னாட்சி அதிகாரத்தோடு வாழும் உரிமையையும் பெற்றுத்தர சர்வதேச சமூகம் இனியும் காலம் தாழ்த்தாது நடவடிக்கை எடுக்கவேண்டும்.'' - என்று தமிழ் மக்களின் சார்பில் பகிரங்கமாகக் கோரியிருக்கிறார் யாழ். ஆயர் வண.தோமஸ் செளந்தரநாயகம்.

போர்நிறுத்தத்திலும், புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் நம்பிக்கை கொண்டவர்களான தமிழ் மக்கள் அதற்காக நீண்டகாலம் காத்திருந்தார்கள். அவர்கள் எதிர்பார்த்த எதுவுமே நடைபெறாமல் காலம் வேகமாக நகர்ந்து கொண்டே இருக்கின்றது என்பதையும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

தமது நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்வதற்கான உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தமிழர்கள், அமைதி வழியிலும் சமாதான முறையிலும் தீர்வு ஒன்று கிட்டும் என்று நீண்டகாலம் காத்திருந்து ஏமாந்துவிட்டனர், விரக்தியின் விளிம்பில் அவர்கள் தற்போது உள்ளனர் என்ற யதார்த்த நிலையையே இப்போது தமிழர்களின் சிவில் சமூகத்தின் மத்தியிலிருந்து எழும் குரல்களும், 'பொங்கு தமிழ்' எழுச்சி போன்ற பிரவாகங்களும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. தமிழர்களின் விடுதலைப் போராட்ட சக்தியான விடுதலைப் புலிகள் அமைப்பு இந்த நிலைக்கு வந்துவிட்டது என்பது ஏற்கனவே தெரிந்த விடயம். இந்தப் பின்னணியில் இவ்விவரங்களை பரிசீலித்து ஒரு முடிவு எடுக்கவேண்டிய காலகட்டம் வந்துவிட்டது என்பதை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளவேண்டும்.

தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் சுட்டிக்காட்டியிருப்பதுபோல, தமிழ் மக்களையும் ஒன்றிணைத்து கூட்டாக நாட்டைக் கட்டியெழுப்பும் விடயத்திலோ அல்லது தமிழர்களுக்கு அவசியமான மனிதாபிமானத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் கடப்பாட்டை நிறைவு செய்வதிலோ அல்லது சமாதான முயற்சிகளை ஆக்கபூர்வமான திசையில் முன்னெடுப்பதிலோ இலங்கை அரசுக்கு உறுதியோ, வல்லமையோ கிஞ்சித்தும் கிடையாது என்பது இப்போது தெளிவாகி வருகிறது.

இந்நிலைமையில், தனது பங்களிப்பை சரியான முறையில் செய்வதற்கு இனிமேலும் காலம் தாழ்த்தாது சர்வதேச சமூகம் முன்வரவேண்டும். தமிழர்கள் உரிமையோடு எதிர்பார்க்கும் இந்த நியாயமான நடவடிக்கையை சர்வதேச சமூகம் முன்னெடுக்குமா?

# 650 பட்டதாரிகளுக்கு இன்று முதல் திட்டமிடல் நிதி உதவியாளர் நியமனம்

யாழ்ப்பாணம்,செப்.24

வடக்கு-கிழக்கில் உள்ள வலயக் கல்வி அலுவலகங்களில் திட்டமிடல் மற்றும் நிதி உதவியாளர்களாக 650 பட்டதாரிகளுக்கு இன்று முதல் நியமனம் வழங்கப்படவிருக்கின்றது.

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் ஆர். தியாகலிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார்.

பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதற்கென நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் ஒரு தொகுதிப் பட்டதாரிப் பயிலுநர்களுக்கு ஏற்கனவே ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

எஞ்சியவர்களில் 650 பேருக்கு இன்று நியமனம் வழங்கப்படுகின்றது.

இதனைவிட மேலும் ஒரு தொகுதியினருக்கு பொதுச்சேவை ஆணைக் குழு மூலமும் நியமனம் வழங்கப்படவுள்ளது.

அதன்பின்னரே நியமனம் கிடைக்காத ஏனைய பட்டதாரிகள் தொடர்பான முடிவு எடுக்கப்படும் என்று மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை-

தொண்டர் ஆசிரியர்களாகப் பாடசாலைகளில் பணிபுரியும் 4ஆயிரம் பேருக்கான நேர்முகப் பரீட்சைகள் தற்சமயம் வலய ரீதியாக நடைபெற்று வருகின்றன என்றும் -

இதில் தகுதியானவர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்றும் - கல்விஅமைச்சுச் செயலாளர் மேலும் தெரிவித்தார். (எ-3)







வடக்கு -கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் மாதர் அபிவிருத்தி நிலைய உற்பத்திப் பொருள்களின் மாகாண மட்டக் கண்காட்சி யாழ். மத்திய கல்லூரியில் நேற்று ஆரம்பமானது. காட்சிக்கு வைக்கப்பட்ட பொருள்களையும் காட்சிப் பொருள்களைப் பார்வையிடுவோரையும் நிகழ்வில் கலந்து கொண்ட கிராம அபிவிருத்தித் திணைக்கள அலுவலர்களையும் படங்களில் காணலாம். *(படங்கள் : பிரபா)*

# செயல்முறைப் பரீட்சைக்குப் பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு உரிய ஆவணங்கள் அவசியம்

## மோட்டார் வாகனப் பரிசோதகர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,செப்.24

சாரதி அனுமதிப்பத்திரம் (லைசென்ஸ்) பெறுதவதற்கான செயல்முறைப் பரீட்சைக்குத் தோற்றுவோர் செயல்முறைப் பரீட்சைக்குப் பயன்படுத்தும் வாகனங்களுக்குரிய சகல ஆவணங்களையும் தவறாது கொண்டுவரவேண்டும்.

- இவ்வாறு மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள வாகனப் பரிசோதகர் ஏ.ரி.எம்.குலாஸ் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக, அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான எழுத்துப் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்தவர்களுக்கு அதனை வழங்குவதற்கென செயல்முறைப் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. அதில் தோற்றும் பலர் தாம் செயல்முறைப் பரீட்சைக்குப் பயன்படுத்தும் வாகனங்களுக்குரிய ஆவணங்களை எடுத்து வரத் தவறி விடுகின்றனர். வாகன சாரதிகளின் இந்தச் செயற்பாட்டால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதனைத் தவிர்க்கும் முகமாக செய்முறைப் பரீட்சைக்குத் தோற்ற வரும் வாகன சாரதிகள் வலுவுள்ள (செல்லுபடியான) வாகனக் காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம் ஆகியவற்றின் மூலப்பிரதிகளைக் கட்டாயம் தம்முடன் எடுத்துவர வேண்டும்.

அதுமட்டுமல்லாது செயல்முறைப் பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கான திகதி அறிவிக்கப்பட்ட பலர் குறிப்பிட்ட திகதியில் அப்பரீட்சைக்குத் தோற்றத் தவறி விடுகின்றனர். இதனால், செயலகத்தில் விண்ணப்பப்படிவங்கள் தேங்குகின்றன. இதனைத் தவிர்க்கும் முகமாக குறிப்பிட்ட திகதியில் செயல்முறைப் பரீட்சைக்குத் தோற்றவேண்டும்.

செயல்முறைப் பரீட்சைக்குக் கொண்டுவரும் வாகனத்தின் பொறிமுறை சீராக இயங்குகின்றனவா என்பதையும் அவதானிக்கவேண்டும். அவ்வாறு இல்லாத வாகனங்கள் பரிசோதனை செய்தபின்னர் செய்முறைப் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டாது - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-410)


### நாளை

*புரட்டாதி 09*
ஞாயிற்றுக்கிழமை
25.08.2005
தி, அட்டமி
பின்னிரவு: 4.17 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம்
பிற்பகல் : 12.59 வரை
சுபநேரம்: 09.02 - 10.32
ராகுகாலம்: 04.32 - 06.02
(யாவும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

பொறுப்புணர்ச்சி என்ற கண்களுடன் எதிர்காலத்தை நீங்கள் பார்க்க வேண்டும்.

- ஹரிமேன்



# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள மிட்சுபிசி கெலன் (யப்பான்) 9 சிறி தொடர் இலக்கமுடைய கார் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி. (40331)

நல்ல நிலையிலுள்ள **Honda CD 200 Mate** (தபால் மேற்) சிவப்புநிற மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.59, சிவன் புது வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். **T.P.:** 0773167951, 0776505932. (40324)

ஸ்ரீ லங்கா ரெலிகொம்மின் கேபிள் தொலைபேசி இணைப்பு ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு: **T.P.No.:** 0776538060. (40337)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஈச்சமோட்டை வீதி, வாசிகசாலைக்கு அருகில் 1¼ பரப்புக் கொண்ட காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: S.S.நாதன், 16/3, விதானையார் வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். (40240)

## வீடு விற்பனைக்கு

அரியாலை சுப்பிரமணியம் வீதியில் 2 பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: **T.P.:** 0777570297. (40355)

## வீடும் காணியும் விற்பனைக்கு

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில், ஆசீர்வாதம் ஒழுங்கையில் 3 பரப்புக் காணியுடன் கூடிய வீடும் 1 பரப்பு, 1½ பரப்பு காணியும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஜே.பி. நீக்கிலஸ், 64, ஆசீர்வாதம் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (40352)

நல்லூர், இருபாலை றோட்டுக்கு மத்தியில் ஞானபாஸ்கரோதய சங்க விளையாட்டரங்க வீதியில் சகல வசதிகளுடனும் அமைந்துள்ள வீடு 3 ½ பரபபுக் காணியுடன் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு: **T.P.No. 0714 068844, 0773 144700.** (40279)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

**Prima** உயிர் **Broiler** மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். (**Electronic** நிறுவை) தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (39657)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட **Original Prima Broiler** குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 03.10.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை, நெல்லியடிக்கிளைகளிலும், சிவகலை - கோப்பாய், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, உடுவில் பாம் சென்ரர்- உடுவில், நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (39763)

## வாடகைக்கு

கோயில் வீதி, நல்லூரில் 3 அறைகள் பெரிய **Hall** மற்றும் சகல வசதிகளுமுடைய கீழ்தள வீடு வாடகைக்குண்டு. 3 அல்லது 4 பேர்களைக் கொண்ட குடும்பத்தினர் விரும்பத்தக்கது. தொடர்பு: 393/17, கோயில் பின் வீதி, நல்லூர். **T.P.:** 222 6461. (40187)

## தவறிவிட்டது

பிரான்சிஸ் சேவியர் ஜெயசேகரம் அடிகளாருடைய தே.அடையாள அட்டை (இல. 433372000V), விசேட அடையாள அட்டை என்பன கச்சேரி நல்லூர் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். 17/3, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (40347)

புத்தூர் மேற்கைச் சேர்ந்த முத்தையா குணரத்தினம் என்பவருடைய தே.அ. அட்டை (313451798X) மற்றும் ஒரு தொகுதிப்பணம் என்பன 17.09.2005 யாழ். போதனா வைத்தியசாலைக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். நியூ சரஸ்வதி விலாஸ், பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. **T.P.:** 0776159713. (40332)

மகாதேவன் தனுஜன் என்பவருடைய தே. அ.அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் 3ஆம் குறுக்குத் தெருவுக்கும் ஆஸ்பத்திரி வீதிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெ டுத்தவர்கள் இல.7, நீக்ளஸ் லேன், கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தொடர்புகொள்ளவும். **T.P.:** 0776184675. (40333)

## மோட்டார் சைக்கிள், கார் வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாடகைக்கு இருபாலாருக்கும் மோட்டார் சைக்கிள், மோட்டார் கார் வாடகைக்கு வழங்கப்படும். இத்துடன் குளிரூட்டப்பட்ட திருமணக் காரும் வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 360/10, பிரதான வீதி, (பஸ்தியான் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம் **T.P.:** 0773222999, 077 6991899 (40087)

### T.V. விற்பனைக்கு

**புதிய உயர்ரக Sony T.V (Wega) XA 21'' உடன் விற்பனைக்குண்டு. மொடல் Nicam/A2 Stereo**

தொடர்பு: **சி.சிவகுமார்**
15/40, மாரியம்மன் வீதி,
*(முத்துமாரியம்மன் பின் வீதி ஊடாக),*
(40348) திருநெல்வேலி தெற்கு. (21.18.15)

### விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுதுபார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ்- போன் சொப்**
*10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திரீ ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.*
(21-17-15) (40556)

## 'கல்லின் கசிவு' அரங்க நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.24

மகளிர் அபிவிருத்தி நிலையம் 'ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பெண்களும் அரங்க செயற்பாடும்' என்ற தலைப்பில் ஆழிப்பேரலை பாதித்த குடத்தனை முதல் தொண்டைமானாறு வரையான பகுதிகளில் ஆற்றுப்படுத்தல் நிகழ்வுகளை நடத்திவருகின்றது.

அந்த வகையில் இன்று சனிக்கிழமை பருத்தித்துறை வியாபாரி மூலையில் இந்த நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் 'கல்லின் கசிவு' எனும் அரங்க நிகழ்வும் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-203)

## சித்த பட்டதாரிகள் சங்கம் அமைப்பு

யாழ்ப்பாணம்,செப்.24

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை அகில இலங்கை சித்த மருத்துவப் பட்டதாரிகள் சங்கம் ஒன்றை உருவாக்கியுள்ளது.

இந்த சங்கத்தின் காப்பாளராக யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறைத் தலைவர் டாக்டர் திருமதி சி.பஞ்சராஜாவும், தலைவராக பேராசிரியர் சு.பவானியும், செயலாளராக டாக்டர் அ. அரவிந்தனும் தெரிவுசெய் யப்பட்டுள்ளனர். (ஒ-203)

### MCS

324, Palaly Road, Jaffna. (Near Alady Junction)

**Speed Batches** — 1 Month



- Visual Basic, VB Net, Java
- Corel Draw, Page Maker, Photoshop
- Cool 3D, Flash, Premiere, HTML
- Accounting Package MYOB
- Microsoft Certified Professional
- A+ Hardware Technician

**Supported by UNDP/JRRP**

### தாதிப் பயிற்சி முடித்தோருக்கு U.K.இல் வேலைவாய்ப்பு

U.K.இல் உள்ள பிரபல்யமான Nursing Home இற்கு அரச சான்றிதழ் பெற்ற தாதிப் பயிற்சி முடித்தவர்களுக்கு வேலை உத்தரவாதச் சான்றிதழுடன் வேலைவாய்ப்பு.

மேலதிக தொடர்பிற்கு:
T.P.:0776180082
E-Mail- K.Thushanthan @ hotmail.Com
**"ஐங்கரன் இல்லம்"**
சூராவத்தை, சுன்னாகம்.
(40362) (39-21-15-18)

### கொலை விலக்கி ஆரோக்கிய அன்னை ஆலயம்

அஞ்சனந்தாழ்வு, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

**திருவிழா இறுதி வழிபாடுகள்**

*இன்று [24.09.2005] சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை பெருவிழா நடைபெறும். நாளை [25.09.2005] ஞாயிற்றுக் கிழமை திருவிழாத் திருப்பலிப் பூசை காலை 7 மணிக்கு ஆரம்பமாகும். திருப்பலியைத் தொடர்ந்து திருச் சொரூப பவனி நடைபெறும்.*

அன்னையின் ஆசீர்பெற அனைவரையும் அழைக்கின்றோம்.

**பங்குத்தந்தை,**
**பங்கு மக்கள்.**
(40364) (39-21-15-18)

### COMPUTER EXPRESS

Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777- 222422,077 3151647

இலங்கையில் முதற்தடவையாக கம்பனிக்கணக்குகளுடன்
Computerized Accounting
*Acc pac+Quick Book Pro+MYOB*
ஆகிய முன்னணி *Accounting Software* அனைத்திலுடாகவும் கற்பிக்கப்படும்.

**Course Contents**
- Fundamentals of IT
- Manual Accounting
- Financial Accounting
- Cost Accounting
- Taxation (Including VAT)
- Stock Control
- Bank Reconciliation
- Badgeting
- Fore Casting
- Business Planing

A/L மாணவர்களிற்குரிய விசேட பிரிவுகள் மேறகுறித்த தினத்தில் ஆரம்பமாகின்றன.

இக்கற்கைநெறியின் முடிவில் வேலைக்கொள்வதற்கு
Audit Firm Experience தேவையில்லை!
Working Experience தேவையில்லை!

ஆரம்பம் 25/09/2005 9.30AM

Tally Accounting Package
புதிய பிரிவுகள் ஆரம்பம்
25/09/2005 12.00-02.00 pm

### புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்- கனடாவினால் எழுத்தாக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன

புங்குடுதீவு பழைய மாணவர்களால் கனடாவில் முன்னெடுக்கப்படும்வருடாந்த சஞ்சிகையான "பூவரசம் பொழுது" என்ற சஞ்சிகைக்கு கட்டுரைகள், கவிதைகள், புங்குடுதீவு பாடசாலைகள், கோயில்கள் போன்றவற்றின் வரலாற்றுக் கட்டுரைகள் என்பனவற்றை புங்குடுதீவு எழுத்தாளர்களிடமிருந்து எதிர்பார்த்து நிற்கின்றனர். மேற்படி ஆக்கங்களை 20.10.2005 இற்கு முன் அனுப்பவேண்டிய முகவரி

Mr.S.M.THANAPALAN,
2323 MCNICOLL AVENUE,
SCARBOUGH ONTARIO,
MIV 4V3, CANADA.
T.P.: 416 - 8293650
FAX: 416 - 2893177
(40338) (39-16-18)



உ
சிவமயம்

### முதலாம் ஆண்டு சிராத்ததின அழைப்பு

*கலை வித்தகனாய்த் திகழ்ந்து*
*கான கீதம் இசைத்தாய்*
*உன் இனிய நாதம்*
*எப்போ எம் காதுகளில் கேட்கும்.*

அன்புடையீர்!
கடந்த 2004-10-05 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்
**நாதஸ்வர வித்துவான்**
**அமரர் பொன்னுச்சாமி சுப்புச்சாமி**
அவர்களின் முதலாம் வருட சிராத்த தினம் பார்த்திப வருடம் புரட்டாதி மாதம் 8ஆம் திகதி இன்று (24-09-2005) சனிக்கிழமை பகல் நல்லூர் சட்டநாதர் கோயில் திவ்விய ஜீவன மண்டபத்தில் நடைபெறும். ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*சட்டநாதர் வீதி,*
*நல்லூர்.* (4035) (24-16-15)

**குடும்பத்தினர்**
(சு.பாலமுருகன்)
நாதஸ்வரம்.

### சலுகை

ஆங்கில ஆசிரியர்கள்; அலுவலர்களுக்கான
**பயிற்சியும் பணிநியமனமும்**

**OPEN ADMISSION** இரண்டு நாட்களுக்கே??

30% சலுகைக்கட்டணத்துடன்????

**SAAMSTECH இன் பயிற்சிநெறிமூலமாக இதுவரை 120 பேர் நியமனம். 90 பேர் பயிற்சியில்.**

பயிற்சிக்காலம் : 3 மாதங்கள். தினமும் இரண்டு மணிநேரம், வாரத்தில் 5 நாட்கள்

**கட்டணம் : ரூபா 12000/-**

**(இன்றும் நாளையும் பதிவுசெய்வோருக்கு 8400/- மட்டுமே)**
பயிற்சி முடிவில் பரீட்சையில் சித்தியடையும் அனைவருக்கும் பணி நியமனம்

**Open Admission**

இன்றும் நாளையும் மட்டுமே பதிவுகளுக்கு கல்வித்தகுதி எதிர்பார்க்கப்படமாட்டாது

**SAAMSTECH**
TEACHERS TRAINING COLLEGE
841, HOSPITAL RD, JAFFNA. 233/4, KASTHURIYAR RD, JAFFNA. 0773068968

# உலக வங்கியின் வீடமைப்புத் திட்டம் முதல் கட்டக் கொடுப்பனவு பூர்த்தி

யாழ்ப்பாணம்,செப்.24

உலகவங்கியின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் வீடமைப்புத் திட்டத்தின்கீழ் யாழ்.மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஆயிரத்து 622 பயனாளிகளுக்குமான முதலாம் கட்டக்கொடுப்பனவு வழங்கப்பட்டுவிட்டது என வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் யாழ். மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் வே. சாம்பசிவம் தெரிவித்தார்.

தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் அனைவருக்கும் முதலாம் கட்டக் கொடுப்பனவான 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுவிட்டது. இரண்டாம் கட்டக் கொடுப்பனவான 60 ஆயிரம் ரூபா 774 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுவிட்டது. மூன்றாம் கட்டக் கொடுப்பனவான 80 ஆயிரம் ரூபா 154 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வெகுவிரைவில் வீடமைப்புக்கு 4ஆம் கட்டக் கொடுப்பனவும் வழங்கப்படும். இறுதிக் கட்டக் கொடுப்பனவான 60 ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கான நடவடிக்கை தற்போது எடுக்கப்பட்டுள்ளது.

பயனாளிகள் வீடமைக்கும் பணியை மேற்கொள்ளும் துரிதத்திற்கு ஏற்பவே கொடுப்பனவுகள் பகுதி பகுதியாக வழங்கப்பட்டு வருகின்றன என்று பிரதித் திட்டப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (எ-202-203)

# சோனப்பு மயானங்களின் அபிவிருத்திக்கு செயற்குழு

யாழ்ப்பாணம்,செப்.24

கரவெட்டியிலுள்ள இரு சோனப்பு மயானங்களையும் அபிவிருத்தி செய்வதற்கான அபிவிருத்திச் செயற்குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இதற்கான கூட்டமொன்று அண்மையில் வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திலேயே செயற்குழுத் தெரிவும் இடம்பெற்றது.

செயற்குழுவின் தலைவராக சி.வீரசிங்கமும், உபதலைவராக வே.கார்த்திகேசுவும், செயலாளராக க.ஆனந்தகுமாரசுவாமியும், உப செயலாளராக ந.நாகராசாவும், பொருளாளராக ஆ.வீரகத்தியும், செயற்குழு உறுப்பினர்களாக செ.கந்தசாமி, ஆ.கந்தப்பு, சி.கந்தசாமி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். 21 குழு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். மிகவிரைவில் அவசரதேவைகளை இனங்கண்டு இரு மயானங்களும் அபிவிருத்தி செய்யப்படும் என பிரதேசசபைச் செயலர் தெரிவித்தார். (எ-202)

# நூலகசேவை நேரம் நீடிப்பு

வலி.தென்மேற்கு, செப்.24

ஒக்ரோபர் மாதம் தேசிய வாசிப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதை முன்னிட்டு வலி.தென்மேற்குப் பிரதேசசபையின் பண்டத்தரிப்பு பட்டின பொதுநூலகம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி முதல் 31ஆம் திகதிவரை இரவு ஒன்பது மணிவரை இயங்கவுள்ளது.

கொழும்பிலுள்ள தேசிய நூலக ஆவணமாக்கல்சேவை சபை ஒக்ரோபர் மாதத் தைத் தேசிய வாசிப்பு வாரமாகப் பிரகடனப்படுத்தி அது தொடர்பான சுற்றறிக்கையை உள்ளூராட்சி மன்றங்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

இதற்கிணங்க தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மேற்கொள்ளப்படவேண்டிய செயற்திட்டங்கள் குறித்து வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின பொதுநூலக ஆலோசனைக் கூட்டம் ஒன்று கடந்த 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று நடத்தப்பட்டது.

இரவு ஒன்பது மணிவரை வாசகர்களுக்காக நூல்நிலையத்தைத் திறந்துவைப்பது என்று இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நூல்களை இரவல் வழங்குதல், பொதுமக்களிடமிருந்து நூல்களைச் சேகரித்தல் ஆகியவற்றையும் இக்காலப் பகுதியில் மேற்கொள்வது என்றும் முடிவுசெய்யப்பட்டுள்ளது. நூல்களைத் தங்கள் குடும்பத்தினரின் ஞாபகார்த்தமாகப் பொதுமக்கள் பொதுநூலகத்திற்கு அன்பளிப்புச் செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

### உயரப்புலத்தில் கூட்டுறவு விற்பனைநிலையம் திறப்பு

வலி.தெற்கு,செப்.24

மானிப்பாய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மொத்தவிற்பனைநிலையம் ஒன்று ஆனைக்கோட்டை உயரப்புலத்தில் அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது. (எ-152)




### டச்சு வீதி புனரமைப்பு

வட்டுக்கோட்டை சீகா வயல் வீதியூடாக வழக்கம்பரைக்குச் செல்லும் டச்சு வீதி நிகொட் திட்டத்தின் கீழ் வட்டு. வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் புனரமைக்கப்பட்டுள்ளது.

பதினொரு லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட இந்த வீதி சுமார் 20 வருடங்களுக்கு மேல் புனரமைக்கப்படாமலிருந்தது. (எ-100)

# பண்டத்தரிப்பு இந்துவுக்கு மூன்று கணனிகள் அன்பளிப்பு

வலி.தென்மேற்கு,செப்.24

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்கு புலவர் கா.வேல்முருகனின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினர் கணனி ஒன்றையும் அதற்கான உபகரணங்களையும் அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இதேவேளை - கல்லூரியின் பழைய மாணவரும், தற்போது சுவிஸில் வசித்துவருபவருமான எஸ். சுதேசராசா என்பவர்இரண்டு கணனிகளை இக்கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்துள்ளார்.

இதனை அடுத்து இக்கல்லூரியில் கணனி அறை ஒன்று உருவாக்கப்பட்டுவருவதாகவும் - விரைவில் மாணவர்களுக்கு கணனிக் கற்கைநெறி ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் கல்லூரி அதிபர் சி.கந்தசாமி இது பற்றி தகவல் தருகையில் தெரிவித்தார். (எ-135)

# தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் புதிய கட்டடம் திறந்து வைப்பு

தென்மராட்சி,செப்.24

தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கான புதிய கட்டடம் கடந்தவாரம் வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்பட்டுள்ளது.


யாழ்.அரச அதிபர் க.கணேஸ் மங்கள விளக்கேற்றி கட்டடத்தினைத் திறந்துவைத் தார். யாழ். செயலக திட்டமிடல் பணிப்பாளர் க.கேதீஸ்வரன் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

யுத்த அனர்த்தங்களின் போது பிரதேச செயலகக் கட்டடங்கள் முற்றாகச் சேதமடைந்ததையடுத்து 'நீர்ப்' நிறுவனம் 16 மில்லியன் ரூபா செலவில் இரு மாடிக் கட்டடங்களை அமைத்துக் கொடுத்துள்ளது.

இக் கட்டடத்தில் எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதி தொடக்கம் பிரதேச செயலகம் முழுமையாக இயங்குமெனத் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சி பிரதேச செயலகம் சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய இடங்களில் தனியார் கட்டடங்களில் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (எ-117)

# முழங்காவில் மகாவித்தியாலயத்தில் நிரந்தரக் கட்டட வசதியின்றிச் சிரமம்



முழங்காவில் மகாவித்தியாலயம் நிரந்தரக் கட்டட வசதிகள் இன்றி பல்வேறு சிரமங்களின் மத்தியில் இயங்கிவருகிறது.

இப்பாடசாலை 7 தற்காலிகக் கொட்டகைகளுடன் இயங்கிவருகிறது. 758இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இங்கு கல்வி கற்றுவருகின்றனர்.

இவர்களுக்குரிய எவ்வித வசதிகளும் இதுவரை ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. நூலக வசதிகளோ, ஆய்வுகூட வசதிகளோ எதுவுமற்ற நிலையில் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களுடன் கல்வி கற்றுவருகின்றனர் எனக் கூறப்பட்டது.

கொட்டகைகளின் கூரைகள் சிதிலமடைந்துள்ளமையால் மழைகாலங்களில் சிரமப்படுவதுடன், மழை வெள்ளம் வகுப்பறைகளில் உட்புகுவதாலும் கற்றல் செயற்பாடுகள் தடைப்பட நேரிடுகின்றன.

எனவே, இந்தப் பாடசாலைக்கு உரிய வகையில் கட்டடங்கள் அமைத்து மாணவர்களின் கல்விக்கு வசதி செய்துகொடுக்கப்பட வேண்டும் என்று பாடசாலைச் சமூகமும் பெற்றோர்களும் அங்கலாய்க்கின்றனர். (எ-415-204)

# சிற்றூழியர் தெரிவுக்கான நேர்முகப்பரீட்சை

கிளிநொச்சி,செப்.22

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றிய சுகாதார உதவியாளர்களைச் சிற்றூழியர்களாகத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் தமது அலுவலகத்தில் நடைபெறவுள்ளன என்று கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சைகள் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறமாட்டா எனவும் - மறுநாள் செவ்வாய்க்கிழமை மட்டுமே நடக்கும் எனவும் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

இதில் தோற்றுபவர்களைப் பிறப்புப்பத்திரம், கல்விச் சான்றிதழ், கிராம அலுவலரின் சான்றிதழ் என்பவற்றுடன் சமூகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சை தொடர்பான நேர ஒழுங்கினை கிளிநொச்சி மாகாண சுகாதாரச் சேவைகள் பிரதிப் பணிமனையுடன் தொடர்புகொண்டு அறியலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-204)

# கிளிநொச்சி விளையாட்டு மைதானத்தில் புதனன்று தேசம் காக்கும் பயிற்சிப் பாசறை

கிளிநொச்சி,செப்.24

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் 28ஆம் திகதி புதன்கிழமை தேசத்தைக் காப்பதற்கான ஆயுதப் பயிற்சிப் பாசறை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு பாசறையின் ஆரம்ப நாள் நிகழ்வு நடைபெறும். நடைபெறப்போகின்ற இறுதிப் போருக்கு முகம்கொடுக்கவும், மீட்கப்படும் தமிழர் தாயகப் பிரதேசத்தின் எல்லைகளைப் பாதுகாக்கவும்-

களத்துணைப் பணிகளை ஆற்றவும் இந்தப் பயிற்சிப்பாசறை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இறுதிப் போருக்கு முகம் கொடுக்க் எல்லோருக்கும் பயிற்சி என கடந்த 20ஆம் திகதி கிளிநொச்சியில் பிரகடனம் செய்யப்பட்ட விடுதலை போருக்கான தேசிய அறை கூவலின் அடிப்படையில் இத்தகைய பயிற்சிகள் மாவட்டத்தின் ச்கல பகுதிகளிலும் நடைபெறும் என்று கூறப்பட்டது.

கிளிநொச்சி மத்திய பயிற்சிப் பாசறையில் அரச உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், கூட்டுறவு வணிக நிறுவனத்தினர், அரச சாரா அமைப்பு பணியாளர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இதன் ஆரம்ப நிகழ்வில் விடுதலைப் புலிகளின் தளபதிகள். பொறுப்பாளர்கள் பங்கேற்பர். (எ-301)

# சமூகக்கல்வி அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றோருக்குப் பரிசில்

துணுக்காய்,செப்.24

துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட பாடசாலைகளில் நடத்தப்பட்ட சமூகக்கல்விக் கண்காட்சி மற்றும், சமூகக்கல்வி அறிவுத் திறன் போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற 28 மாணவர்கள் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர். இந்தப் பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த 15ஆம் திகதி மாங்குளம் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

யுனிசெவ் நிறுவனம் இந்த பரிசில்களை வழங்கியிருந்தது. யுனிசெவ் நிறுவனத் திட்ட இணைப்பாளர் திருமதி சி.கௌரிபாலன், வலயக் கல்விப் பணிப்பார் ஏ.கே.குரூஸ் ஆகியோர் மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கினர்.

துணுக்காய் கல்வி வலய சமூகக்கல்வி பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி பு.தயாநிதி தலைமையில் இந்த பரிசில் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. (எ)

"என்ர மகன் நல்லாப் படிப்பான், ஆனா என்ன செய்யிறது? என்ர கணவர் உழைக்கிற காசுக்கு அப்பிடியே குடிச்சிட்டு வாறார். என்ர பிள்ளையள வளர்க்கிறதுக்காக நான் 8ஆம் வகுப்போட அவனை நிப்பாட்டினன். அவன்தான் இப்ப உழைச்சு எங்களப் பாக்கிறான்"

— ஞானம்மா வயது 37

**நினைவில் கொள்ளுங்கள்**

இலங்கையில் 14 வயதிற்குட்பட்டவர்கள் எத்தகைய வேலைகளிலும் ஈடுபடுவதற்குத் தடைசெய்யப்பட்டதுடன் அவர்களை வேலைக்கு அமர்த்துவோர் குற்றம் புரிந்தவராவார். - சிறுவர் இளம் பெண் தொழிற்சட்டம்.

?

பெற்றோர்களே!
கல்வி கற்கவேண்டிய சிறுவர்களிடம்
கடமைகளையும் குடும்பப்
பொறுப்புக்களையும்
சுமத்தும் நிலையை தவிர்க்க
முன்வருவீர்களா?

**உலக சிறுவர் தினத்திற்கு இன்னும் 7 நாள்களே உள்ளன.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
### வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் **வயிரவிப்பிள்ளை சின்னையா**

அன்னை மடியில் 26-05-1926

ஆண்டவன் அடியில் 25-08-2005

*உமையீந்து எமைக் காத்தீர் தந்தையே!*
*உம் நினைவில் வாழ்வோம் என்றுமே!*
*வேரக்கேணி முருகனின் அடியிலே*
*உம் ஆத்மா சாந்தி அடையட்டும்!*

இன்று (24-09-2005) சனிக்கிழமை முற்பகல் 11மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புதுவளவு,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (40341)(46-18-19) **-குடும்பத்தினர்.**

## குருதி மாற்றுச்சேவை அலுவலகத்துக்கென புதிய கட்டடம்

நல்லூர்,செப்.24

குருதி மாற்றுப் பிரயோக சேவைகள் அலுவலகத்துக்கென கொழும்பில் சர்வ தேச ஜப்பானிய வங்கிக் கூட்டுத்தாபனத்தின் உதவியுடன் புதிய கட்டடம் கட்டப்படுவதாகவும்-

தேசிய எய்ட்ஸ் நோய்த் தடுப்புத் திட்டத்தின் கீழ் இரத்ததானம் செய்யும் தொண்டர்களின் மருத்துவப் பாதுகாப்பு, விழிப்புணர்வு என்பவற்றைச் செயற்படுத்த உலக வங்கி முன்வந்துள்ளதாகவும்-

மருத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவனம் இப்பொழுது இரத்தப் பரிமாற்ற மருத்துவத் துறையில் பட்டங்களை வழங்க ஏற்பாடு செய்துள்ளதாகவும்-

குருதிக் கொடையாளர் கௌரவிப்பு விழாவில் கலந்துகொண்ட தேசிய குருதி மாற்றுச் சேவையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி ஆர்.எம். பிந்துசாரா தெரிவித்தார்.

(111)


## திருத்துதல்

மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், சகலவித கமராக்களும், எலக்ரோனிக் பிளாஸ்கன், ஜெனரேற்ரர், வாட்டர்பம் போன்றவற்றின் பிளாஸ்ரிக் உடைவுகள் ஒட்டுதலும், திருத்துதலும் செய்யப்படும்.

*தொடர்புகளுக்கு:*
*இல.301, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*(கன்னாதிட்டிச் சந்தி சமீபமாக மேல்மாடி)*

## யாழ் - கொழும்பு பெரிய பஸ் கட்டணம்
## குறைக்கப்பட்டுள்ளது Rs.1100/=
## திறீ ஸ்ரார் ஹோட்டல்

இல.162, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P.: 222 3817 7125


## நன்றி நவிலல்

### திருமதி **திலகவதி தர்மராசா**

2005-09-11ஆம் திகதி அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் மரணச்சடங்குகளில் கலந்துகொண்ட அனைத்து அன்பர்களுக்கும், அனுதாபச்செய்திகள் அனுப்பி வைத்தவர்களுக்கும், மலர்வளையங்கள் வைத்தோருக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், பலவகைகளில் எமக்கு உதவியோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தங்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே நன்றி கூற இயலாமைக்காக வருந்துகின்றோம்.

**க.மு.தர்மராசா,**
**பேறாமக்கள், மருமக்கள்.**

தொ.பே. இல: 2361792 (சி/45255)(46-18-19)


BTEC Edexcel International - UK

## அனேக மாணவர்களின் வேண்டுகோளிற்கிணங்க யாழ் மண்ணில்!

IDM
The Nation's IT Academy

# Higher National Diploma (HND) In

Computing
Software Engineering
Computer Network Technology
HND.in Business
Business IT
Multimedia Integeration

Sc/MIT
B.Sc
Semester 4 Rs.50000.00
Semester 3 Rs.50000.00
Semester2 Rs.50000.00
Semester 1 Rs.35000.00
G.C.E.O/L,A/L
BTEC-DIP,ICT
HND+HNC

Our Students Can Follow B.S.c Degree Programmes From These International Universities

1) London Metro Politan University - U.K
2) Charles Sturt University _ Australia
3) Wolverhampton University - U.K
4) Northumbria University Australia

**எமது நிறுவனத்தினால் யாழ் மாணவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள்!!!**

எமது நிறுவனமானது நேரடியாகவோ BTEC Edexcl -U.K நிறுவனத்துடன் தொடர்புடைய ஒரே யொரு நிறுவனமாகும் Visit -WWW.idm.lk) யாழ் மாணவர்களுக்கான நியாயமான கட்டணச் சலுகைகளுடனும் எமது நிறுவனத்தில் B.TEC - DICS கணனிக் கற்கை நெறியைபூர்த்தி செய்த மாணவர்கள் Semester1 பிரிவுக்கு எவ்வித கட்டணமும் செலுத்த வேண்டிய அவசியமில்லை என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

**!!!FIRST Semester!!!Free!!!**
**!!Our BTEC.Dip.ICT Students Only!!**

## HND தொடர்பான விசேட இலவச பயிற்சிக் கருத்தரங்கு

இவ் HND கற்கை நெறி தொடர்பாக எமது யாழ் மாணவர்களுக்கு 25.09.2005 ஞாயிற்றுக்கிழமை நாளை 10.00 மணிக்கு (மு.நே)எமது நிறுவனத்தில் நடைபெறவுள்ளதால் அன்றைய தினம் எமது நிறுவனத்தில் BTEC.Dip.ICT கணனிக் கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்களும மற்றும் HND கற்கை நெறியை எமது நிறுவனத்தில் கற்க விரும்பும் மாணவர்களும் இக் கருத்தரங்கில் பங்குபற்றி பயன் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும்:

**No,216,Navalar Road,Jaffna.Tel:-0214591398**

# வடமராட்சி மென்பந்தாட்டம்: கழுகுகள் அணி சம்பியனானது

வடமராட்சி மென்பந்து துடுப்பாட்டச் சங்கம் நடத்திய மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் கழுகுகள் விளையாட்டுக் கழகம் - கரவெட்டி ஸ்பேர்ஸ் விளையாட்டுக் கழகத்தை 39 ஓட்டங்களால் தோற்கடித்து சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக்கொண்டது.

கடந்த வாரம் வடமராட்சி மென்பந்து துடுப்பாட்டச் சங்கத் தலைவர் மா.முரளி தலைமையில் திக்கமுனை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் கழுகுகள் விளையாட்டுக் கழகமும், கரவெட்டி ஸ்பேர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய கழுகுகள் விளையாட்டுக்கழகம் நிர்ணயிக்கப்பட்ட 12 ஓவர்களில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது. ஜீவகன் 46 ஓட்டங்களையும், ரூபன் 37 ஓட்டங்களையும் அசோக் 27 ஓட்டங்களையும் கோபிநாத் ஆட்டமிழக்காமல் 10 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

கேதீஸ் 2 விக்கெட்டுகளையும் சசி, நிஷாந்தன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 138 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஸ்பேர்ஸ் வி.க. நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 98 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

நிஷாந்தன் 21 ஓட்டங்களையும் யூட்சுவன், விவேக் மற்றும் சசிதரன் ஆகியோர் முறையே 17, 18 மற்றும் 13ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

ரூபன் 2 விக்கெட்டுகளையும், அசோக், சுதன் மற்றும் ஜீவகன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இவ் ஆட்டத்தின் நாயகனாக கழுகுகள் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஜீவகன் தெரிவு செய்யப்பட்டார்.

அதற்கு முன்னர் இடம்பெற்ற காட்சிப் போட்டியில் வீனஸ் விளையாட்டுக்கழகம் எதிர்த்து விளையாடிய பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை ஒருவிக்கெட்டால் தோற்கடித்து வெற்றியீட்டியது.

(3-410-190)

# பாடசாலைகள் கிரிக்கெட்

## ஓர் ஓட்டத்தால் சென்.ஜோன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம்,செப்.24

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி விளையாட்டுத்துறை அமைச்சு பாடசாலைகளுக்கிடையில் நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி ஓர் ஓட்டத்தால் வெற்றிபெற்றது.

கடந்த திங்கட்கிழமை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் சென். ஜோன்ஸ் கல்லூரியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 8 விக்கெட்டுகளை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றது.

சஞ்ஜீவன், நேசவர்மன், கிறிஸ்ஷந் ஆகியோர் முறையே 55, 15, 15 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

றாஜ்குமார் 28 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும், சஜீவன் 14 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி ஒன்பது விக்கெட்டுகளை இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றது.

நிரேஷன், நிஷாகரன் முறையே 49, 40 ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

நவகீதன் 18 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் நீருபன் 12 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுகளையும் அக்சேயன் 18 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் கிறிஸ்ஷன் 14 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

(3-190)

## 9 விக்கெட்டுக்களால் சென்றல் வென்றது

இச்சுற்றுப்போட்டியில் மற்றோர் ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியும் யூனியன் கல்லூரி அணியும் மோதியதில் -

யாழ்.மத்திய கல்லூரி அணி ஒன்பது விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

யூனியன் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது.

ஜக்சன், லக்ஷயன் முறையே 13, 09 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

வியாசன் எட்டு ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் மயூரன் 20 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுகளையும் மகிபன் 14 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் தயான் எட்டு ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி ஒரு விக்கெட்டினை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது.

வினோத்குமார், நவநீத், சுதர்சன் முறையே 19, 15, 10 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பென் ஜோய் 5 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டினை வீழ்த்தினார். (3-190)

# மாகாண மட்ட சதுரங்கப் போட்டி: பெண்களுக்கான ஆட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம்,செப்.24

தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ள சதுரங்கப் போட்டியில் பங்குபற்றுவதற்கு மாகாண மட்டப் பெண்கள் அணிகளை தெரிவுசெய்வதற்கான தெரிவுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளன.

9, 11, 13, 15, 20 ஆகிய வயதுப் பிரிவினரிடையே இந்தப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறும் வீராங்கனைகளுக்கு முறையே தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகிய பதக்கங்கள் வழங்கப்படும் என யாழ்ப்பாண சதுரங்க சம்மேளனத்தினர் தெரிவித்துள்ளனர்.

(3-203)

*தேசிய மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டியில் மாகாணச் சம்பியனான வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தின் ஆண்கள், பெண்கள் அணிகள் பங்குபற்றின.*

*பெண்கள் பிரிவினரும் ஆண்கள் பிரிவினரும் ஆட்டத்தில் பங்குபற்றும் காட்சிகள்.*

*(படங்கள்:வட்டக்கச்சி செய்தியாளர்)*



# விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன



யாழ்ப்பாணம்,செப்.24

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இயங் கும் பதிவு செய்யப்பட்ட விளையா )க் கழகங்களுக்கு யாழ்.மாவட்ட விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு பிரதேச செயலாளர் பிரிவில் கழகங்களுக்கிடையே இடம்பெற்ற போட்டிகளில் கலந்துகொண்ட விளையாட்டுக் கழகங்களுக்கே இவ் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

உதைபந்துகள், கரபந்தாட்டப் பந்துகள், கூடைப்பந்துகள் மற்றும் உதைபந்தாட்டத்திற்குத் தேவையான காலணிகள் போன்ற உபகரணங்களே வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு விளையாட்டு உத்தியோகத்தர் க.விஜிதரன் தலைமையில் நடைபெற்றது.

நல்லூர் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டுப் பொருள்களை வழங்கினார்.

(3-86-203)



*புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்திய வலைப்பந்தாட்டப் போட்டியில் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்ட உடுவில் பாடசாலை விளையாட்டுக் கழக அணியினரையும் அதன் பயிற்றுவிப்பாளர்களையும் படத்தில் காணலாம். (படம்:- வசந்தன்)*

# புத்தூரில் நடந்த "செற்அப்" கரப்பந்தாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி சம்பியன்

யாழ்ப்பாணம்,செப்.24

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 'செற்அப்' ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

இந்த இறுதியாட்டம் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு கழகத் தலைவர் கு.மகாதேவன் தலைமையில் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகமும் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகமும் மோதிய இந்த ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாகவும், பரபரப்பாகவும் இடம்பெற்றது. இந்த ஆட்டத்தில் 3:1 என்ற செற்கணக்கில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

இப்போட்டியின் சிறந்த விளையாட்டு வீரனாக இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த வினோதன் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ந்து இடம்பெற்ற அணிக்கு 6 நபர் பங்குபற்றும் 'ஓவர் கேம்' முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகமும் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகமும் மோதின.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இந்த ஆட்டத்தில் பலத்த போட்டியின் மத்தியில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் 3:2 என்ற சுற்றுக் கணக்கில் வென்று சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த செ.சிவனேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டார்.

அடுத்து நடைபெற்ற அணிக்கு 4நபர் பங்குபற்றும் 'ஓவர் கேம்' முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக்கழகமும் வல்வெட்டி குணசேகரா விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் 61:55 என்ற புள்ளிகள் அடிப்படையில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது. இப்போட்டியின் ஆட்ட நாயகனாக சிவகுமரன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.சந்தோஷ் தெரிவு செய்யப்பட்டார்.

(3-410-190)




## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,செப்.24

நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகம் தனது 14 ஆவது ஆண்டு நிறைவையொட்டி கழக மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* பிற்பகல் 3.30 மணி - காளி அம்பாள் வி.க. எதிர் இளம்தென்றல் வி.க.
* மாலை 4.30 மணி - நவசக்தி வி.க. எதிர் சென்.மைக்கல் வி.க

(3-190)

## உதைபந்தாட்டம்

வலி.வடக்கு,செப்.24

யாழ்.மாவட்ட கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டி அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளது.

முதற்கட்டமாக கோட்ட மட்டத்தில் இப் போட்டிகள் இடம்பெற்று இரண்டாம் சுற்றில் வலய மட்டத்தில் இடம்பெறும். (ஒ-86)

## பில் கிளார்க் தேவை

G.C.E (O/L) ஆங்கிலத்துடன் சித்தியடைந்த பில் கிளார்க்கும், பழக விரும்புபவர்களும் தேவை. சொந்தக் கையெழுத்திலான விண்ணப்பத்துடன் உறவினர் அல்லாத இருவரின் நற்சான்றிதழுடனும் தராதரப் பத்திரங்களுடனும் நேரில்வரவும்.

*(நல்ல சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்)*

**சிவா நறுமணப் பூங்கா,**
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/45245)(46-34-19) T.P.: 021 222 2567.



## புதிய பிரிவுகள் ஆரம்பம்
## External Degree

**2005, 2006 பிரிவுகளுக்கானது**
(Jaffna University)

G.A.Q. | 1st in Com. | B.A. | B.Com

**ஆரம்பம்: 24-09-2005**

Further Details
**Director**
**Jaffna College Undergraduate Dept.,**
464, Hospital Road,
(Near Commercial Bank) Jaffna.
(சி/45228) (24-46-34-19



## வங்கியில் வேலைவாய்ப்பை பெறுவதற்கான வங்கியியல் கற்கைநெறிகள்
## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**ACBF, CBF**

அடிப்படைத் தகைமைகள்

G.C.E.(A/L) 2 Passes and G.C.E.(O/L) 6 Passes WITH
5 credits including
Maths / Commerce & Accounts and Language (Tamil / English)

விரிவுரைகள் ஆரம்பம் :- 24-09-2005 (8.30a.m.)

INQUIRIES / REGISTRATION
DIRECTOR
JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPT.
(சி/45227)(46-34-19) 464,Hospital Road, Jaffna.


## வேலைத் திட்டம் குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.24

நிவாரணப் புனர்வாழ்வுநல்லிணக்க அமைச்சின் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பான மாதாந்த மீளாய்வுக் குழுக்கூட்டமும் 2006ஆம் ஆண்டு அமுல்படுத்தவிருக்கும் வேலைத் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடலும் எதிர்வரும் 26ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளன.

அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவன அதிகாரிகள் அனைவரையும் கலந்து கொள்ளு மாறு மாவட்டச் செயலகத் திட்டப்பணிப்பாளர் க.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(ஒ-203)

## தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு!

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் எதிர் வரும் டிசெம்பர் மாதம் இறுதிப் பரீட்சைக் குத் தோற்றும் மாணவர்கள் மற்றும் மீள் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அனை வரும் உரிய படிவங்களைப் பூர்த்திசெய்து எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர், பரீட்சை மதிப்பீட்டு அலுவலரிடம் கையளிக் குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 2004ஆம்ஆண்டிற்கும் அதற்கு முன்பும் என்.சி.ரி.பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான மீள் பரீட்சை 2005,2006 ஆகிய இரண்டு ஆண்டுகள் மட்டுமே நடத்தப்படவுள்ளதாகவும் -

ஆகவே, மீள் பரீட்சார்த்திகள் இந்த இரண்டு தடவைகளுக்குள் சித்தியடையவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ஒ-12)


## இந்தியாவில் கல்விகற்க வாய்ப்பு

**பிருந்தாவன் கல்லூரி**
பெங்களூர் பல்கலைக்கழகத்துடன் இணைந்தது

★ பி.எஸ்.ஸி. - நுண் உயிரியல்
உயிரியல் தொழில்நுட்பம்
கணனி விஞ்ஞானம்
மரபியல் [3 வெற்றிடங்களே உள்ளன]
★ பி.பி.எம். - முகாமைத்துவம் [வெற்றிடங்கள் கிடையாது]
★ பி.சீ.ஏ. - கணனிப் பிரயோகம் [2 வெற்றிடங்களே உள்ளன]

(சி/45217) (24-46-34-19)

2005 செப்ரெம்பர் 25ஆம் திகதிக்கு முன்னர் இணைந்து கொள்வதன் மூலம் கற்கைநெறியின் ஒரு வருடத்தை மீதப்படுத்திக்கொள்ளலாம்.

கொம்பனி செக்ரெற்ரேசியல் சேர்விஸஸ் [பிறைவேற்] லிமிட்டெட்
285 C 1/1, ஸ்ரான்லி திலகரத்ன மாவத்தை - நுகேகொட.
தொலைபேசி - 011 2854438 / 0777 317043

**Company Secretarial Services (Pvt) Ltd.,**
285C 1/1, Stanley Tillakaratne Mawatha - Nugegoda.
T.P.No.: 011 2854438 / 0777 317043


## புனரமைப்புக் கொடுப்பனவு

ஆழிப்பேரலையால் குறைந்தளவாகப் பாதிப்படைந்த வீடுகளுக் கான புனரமைப்புக் கொடுப்பனவுகளை நேரடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத் தகவலை யாழ். அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.

இதுதொடர்பாக மேலும் அவர் தெரிவித்ததாவது:-

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் 40 வீதத்திற்குக் குறைவாகப் பாதிக் கப்பட்ட வீடுகளுக்கு வங்கி மூலம் புனரமைப்பு நிதி வழங்கப்பட்டு வரு கின்றது. அவற்றில் பல குடும்பங்கள் இந்த நிதியைப் பெற்றுக்கொள்ளவில்லை. இவற்றைக் கருத்திற்கொண்டு மேற்படி நிதியை நேரடியாக வழங்கு வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கென பாதிக்கப்பட்ட மக்களுடனான சந்திப்புகள் பிரதேச செயலர்களால் நடத்தப் பட்டுள்ளன என்று அரச அதிபர் கூறினார். (ஒ-202-203)


## ADVANCED FIELD OFFICER
## For FOOD SECURITY DEVELOPMENT PROGRAMME (JAFFNA)

ACTION CONTRE LA FAIM

Action Contre La Faim is an International NGO involved in humanitarian activities in Sri Lanka, since 1997. Current activities are based in Ampara, Batticaloa, Jaffna and Trincomalee districts. For a coming development programme of 2 years, **we require services of a woman as advanced field officer (AFO) in Jaffna.**

This position is suitable for a sociologist, economist or an agriculturalist, who has strong experience in running Food Security programs.

The AFO will be in charge of development programmes, mainly in the Islands, with a targeted gender approach (initiatives with women's group, widows…). She will manage the collection and analysis of livelihood data, the reporting and occasionally the representation at technical meetings in Jaffna. She will join a team of 2 AFOs (Junior and senior) and will work under the responsibility of the Food Security Programme Manager in Jaffna.

Applicants must be good in team management, fluent in English and able to do conversation in Tamil. Computer literacy, especially MS Word and Excel is required.

Category: Senior position
Duration: 1 year with insurance coverage.

Apply with in 15 days or as soon as possible:

**ACF Food Security Job Vacancy**
**No.40, Racca Lane,**
**Chundikuli.**
**Jaffna. Tel./Fax: 021-222-2465.**

(39991)





## ரன் கெகுளு

## அன்புள்ள அம்மா, அப்பாவுக்கு...

தாய் தந்தையென்ற அந்தஸ்தை பெறுவது பெரும் பாக்கியமாகும்... மழலையின் சிரிப்பொலி கேட்கும் இல்லம் எவ்வளவு சுந்தரமானது... உங்கள் உயிர் நாடியான குழந்தையின் எதிர்காலத்தைச் வசந்தமாக்குவதற்கு... குழந்தைக்கு மேலுமோரு உதவிக்கரத்தை இலங்கை வங்கி அன்புடன் உங்களுக்கு வழங்குகின்றது.

2005ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதலாம் திகதி (01.08.05) உங்கள் மகள் அல்லது மகன் இவ்வுலகில் காலடி எடுத்து வைத்திருந்தால் ரூபா. 1000/- வைப்பிலிட்டு ரண்கெகுளு கணக்கொன்றை உங்களுக்கு வழங்க நாம் தயாராக இருக்கின்றோம்.

உங்கள் குழந்தையின் பிறப்புச் சான்றிதழுடன் அருகில் இருக்கும் இலங்கை வங்கிக்கு 31 ஒக்டொபர் 2005 அல்லது அதற்கு முன்னர் வரவும் அவர்களின் எதிர்காலத்தை வளமாக்கும் ரண்கெகுளு கணக்கொன்றை (ரூபா. 1000/- ) பரிசாக பெற்றுக்கொள்ளவும்.

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்




## 'ஈரமில்லா இதயம்' நூல் வெளியீடு இன்று

யாழ்ப்பாணம், செப்.24

அ.தம்பித்துரை எழுதிய 'ஈரமில்லா இதயம் நூல் வெளியீட்டுவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிவஸ்ரீ சி.சரவணபவஐயர் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சிவாகம கலாநிதி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்களின் ஆசியுரையும் சிவத்திரு வ.குமார்சாமி ஐயாவின் வாழ்த்துரையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி சி.சிவலிங்கராசாவின் அறிமுகவுரையும் இடம்பெறும்.

தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் துறைத் தலைவர் கலாநிதி நா.சண்முகலிங்கன் வெளியீட்டுரையையும் யாழ். பல்கலைக் கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ. குமரன் மதிப்பீட்டுரையையும் நூலாசிரியர் அ.தம்பித்துரை பதிலுரையையும் நிகழ்த்துவர்.

(த-203)

## தென்மராட்சி வலய மாணவருக்கு போட்டிகள்

தென்மராட்சி, செப்.24

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களிடையிலான மாலை கட்டல், கோலம்போடுதல் போன்ற போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகள் எதிர்வரும் 28ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலைகட்டல் போட்டிக்கு தரம் 6, 7 வகுப்புகளிலிருந்து தலா ஒரு மாணவர் வீதமும் கோலம் போடுதல் போட்டிக்கு தரம் 8, 9 வகுப்புகளிலிருந்து தலா ஒரு மாணவர் வீதமும் கலந்துகொள்ளலாமென்று பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-117-31)

## வலிகாமம் வலய செயலமர்வு

வலி.தெற்கு, செப்.24

வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினர் கட்டாயக் கல்வித் திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களின் வரவை மேற்பார்வை செய்யும் குழுக்களை வலுப்படுத்தும் செயற்திட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

இது தொடர்பான செயலமர்வொன்று எதிர்வரும் முதலாம் திகதி மானிப்பாய் மெமோறியல் நவோதயக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் கல்விவலயத்தில் உள்ள பாடசாலைகளில் இதுவரை காலமும் கட்டாயக் கல்விக் குழுக்கள் அமைக்கப்படாதிருந்தால் அவற்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், இதுவரை கட்டாயக் குழுக்களை அமைத்துள்ள பாடசாலைகளில் அவற்றை வெற்றிகரமாகச் செயற்படவைத்தல், பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களை மீண்டும் இணைய வைத்தல் போன்ற பல செயற்றிட்டங்கள் பற்றி இச்செயலமர்வின்போது கலந்துரையாடப்படும்.

இச்செயலமர்வில் உடுவில், தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், சங்கானை கல்விக் கோட்ட பணிப்பாளர்கள், தெரிவு செய்யப்பட்ட 48 பாடசாலை அதிபர்கள், சமூர்த்தி முகாமையாளர்கள், சிறுவர்பராமரிப்புஉத்தியோகத்தர்கள், சமூகசேவையாளர்கள் எனப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (த-152)

## பாதாள உலக நபர் சுட்டுக்கொலை!

கொழும்பு, செப்.24

மொறட்டுவையில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பாதாள உலகக் கோஷ்டியின் முக்கிய புள்ளியொருவர் கொல்லப்பட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து நேற்றுமுன்தினம் இரவு களுத்துறைக்குச் சென்றுகொண்டிருந்த சொகுசு பஸ் வண்டியினுள் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட இந்த நபர் பாணந்துறை பிங்வத்த பகுதியைச் சேர்ந்தவரென்பது விசாரணை களிலிருந்து தெரியவந்துள்ளதாக மொறட்டுவ பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரட்னாயக்க தெரிவித்தார்.

கொழும்பு தனியார் பஸ் தரிப்பிடத்தில் இருந்து களுத்துறை நோக்கிப் புறப்பட்ட இந்த பஸ்ஸிலேயே கொலையாளிகளும் பயணித்துள்ளனர் எனப் பொலீஸாரின் ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மொறட்டுவ பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால், இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. (எ-க)

# செப். 30இல் 'பொங்குதமிழ்'

## குடாநாடெங்கும் பரவலாக பொங்குதமிழ் நிகழ்வுப் பிரசாரம்

பொங்குதமிழ் பிரசாரப் பணிகள் யாழ். குடாநாடெங்கும் பரவலாக இடம் பெற்று வருகின்றன.

தீவகம், வலி.வடக்கு, ஆனைக் கோட்டை, மானிப்பாய், திருநெல் வேலி உட்படப் பல்வேறு பகுதிகளி லும் பிரசாரப் பணிகள் மாணவர் களால் பெரும் எடுப்பில் மேற்கொள் ளப்படுகின்றன.

இதேவேளை - சில இடங்களில் மாணவர்களால் அரங்கச் செயற்பாடு களும் முன்னெடுக்கப்பட்டன.

யாழ். பல்கலைக்கழக மாணவர் களால் அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு ஆகிய இடங்களில் வீடு வீடாகப் பொங்குதமிழ் பிரசாரம் மேற் கொள்ளப்பட்டது. பொங்குதமிழ் பானையுடன் கூடிய அலங்கார ஊர்தி களும் குடாநாட்டில் வலம்வந்தன.



யாழ். ஆனைப்பந்திப் பகுதியில் பொங்குதமிழ் பிரசாரப் பணியில் ஈடுபட்ட ஊர்தி. (படம்: பகிர்)

இதேவேளை - பண்டத்தரிப்பு, விளான் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சமுர்த்தி அங்கத்தவர்கள் பொங்கு தமிழ் பங்களிப்புக் குறித்து திட்டமிட்ட னர். அத்துடன், இளவாலை யூதாதேயு சனசமூக நிலையம், சீந்துப்பந்தல் கடற்றொழிலாளர் சங்கம், மாதகல் கடற்றொழிலாளர் சங்கம், மாதகல் சென்.தோமஸ் லூர்து மேரி கல்லூரி ஆகிய இடங்களிலும் பொங்குதமிழ் தொடர்பான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுக்கு இன்னும் சிலநாள்களே உள்ள நிலையில் குடாநாட்டில் பொங்குதமிழ் விழிப்புணர்வும் எழுச்சியும் பாரிய அளவில் முன்னெடுக்கப் பட்டுச் செல் வதைக் காணக்கூடியதாக உள்ளது. (ஒ-12-31)

## பொங்குதமிழில் எடுத்துரைப்போம்

செப்ரெம்பர் 30இல் இடம்பெறவிருக்கும் பொங்குதமிழானது தமிழர் வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். சிங்கள தேசம் தேர்தல் ஜுரத்தில் தவிக்கும் காலமிது. ஸ்ரீலங்காவில் ஏற்படும் எந்த ஆட்சி மாற்றமும் தமிழர் பிரச்சினைக்குக் குறைந்த பட்சத் தீர்வையேனும் வழங்கவில்லை என்பதே 57 ஆண்டுகால வரலாற்றுப் பாடமாகும்.

ஸ்ரீலங்காவின் தேர்தலில் தமிழர் தேசத்திற்கு அக்கறை இல்லை. நான்கு ஆண்டுகளுக்கு முன் எமது அபிலாசைகளை வெளிப்படுத்தினோம். இராணுவபலம், மக்கட்பலம் நிர்வாகக் கட்டுமானங்களுடைய நடைமுறை, அரசு ஆகியவற்றைக் கொண்டிருந்த தமிழ்மக்களின் பிரதிநிதிகள் சமாதானத்திற்கான ஒரு பாதையைச் சிங்களத் தலைவர்களுக்குத் திறந்து விட்டனர். பேரினவாத சிங்கள ஆட்சியாளர்கள் வரலாற்றின் இந்த அரிய சந்தர்ப்பத்தையும் தவறவிட்டனர். நாம் இனி யாது செய்வோம் என செப்ரெம்பர் 30இல் பொங்குதமிழ் எழுச்சி யில் எடுத்துரைப்போம். எமது ஒன்றுபட்ட திரளல் எமது செய்தியைச் சிங்கள தேசத்திற்கு மட்டுமன்றி சர்வதேசத்திற்கு எடுத்துரைக்கும்.

**வடக்கு - கிழக்கு மாகாண அரச பொது ஊழியர் சங்கம்.**

## விமானக் குண்டு வீச்சில் உயிரிழந்த மாணவர் நினைவுதினம் அனுஷ்டிப்பு

வடமராட்சி,செப்.24

நாகர்கோயில் மகாவித்தியாலயம் மீது நடத்தப்பட்ட விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலில் பலியான 20 மாணவர்களினதும் பொதுமக்களினதும் 10ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு புலோலி கிராமக்கோட்டடியில் இயங்கிவரும் நாகர்கோயில் மகாவித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நண்பகல் 12.30 மணியளவில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் சி.மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் இடம்பெற்ற ஆழிப்பேரலையில் சிக்கிப் பலியான இதே வித்தி யாலயத்தைச் சேர்ந்த 12 மாணவர்களுக்கும் அஞ்சலிசெய்யப்பட்டது.

'புக்காரா' விமானக்குண்டு வீச்சில் பலியான 20 மாணவர்களின் உருவப்படங்களும் ஆழிப்பேரலை அனர்த்தத்துக்குப் பலியான 12 மாணவர்கள், ஓர் ஆசிரியை ஆகியோருக் கும் 'புக்காரா' குண்டு வீச்சில் நாகர்கோயிலில் பலியான பொதுமக்களுக்கும் மலர் உருவப்படங்கள் தனித்தனியே மேடையில் வைக்கப்பட்டு பெற்றோர், உற்றார், உறவினர்களால் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து நாகர்கோயிலில் பலியான மாணவர்கள், பொதுமக்கள் ஆழிப் பேரலையால் மரணமான பொதுமக்கள், யுத்தத்தில் பலியான போராளிகள், பொதுமக்கள் ஆகியோருக்கு இரு நிமிட மௌன அஞ்சலிசெலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அதிபரின் தலைமையுரை இடம்பெற்ற பின்னர் தென்னிந்தியத் திருச் சபையின் வண.பிதா தேவநேசன், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் சு.ஆனந்த மூர்த்தி, சித்தவைத்தியர் கே.அழகராசா, மணற்காடு றோ.க.த.க. பாடசாலை அதிபர் எஸ். குருகுலலிங்கம் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினார்கள். மாணவர்களின் கவிதாஞ்சலி யும் இடம்பெற்றது.

இந்நிகழ்வு நிசப்தத்தின் மத்தியில் பெற்றோர்கள், உறவினர், அதிபரின் கண்ணீர் அழு கைக்கு மத்தியில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. இதனை அவதானித்துக் கொண்டிருந்த ஏனையோரும் வாய்விட்டு அழுதனர். (எ-70-173)

## அரச ஊழியர், ஓய்வூதியருக்கான சுனாமி கொடுப்பனவை நிறுத்தக்கூடாது!

### பாதித்த பகுதிப் பிரதேச செயலர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.24

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கு மாதாந்தம் வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு, பாதிப்படைந்த அரச உத்தியோகத்தர்களுக்கும், ஓய்வூதியர்களுக்கும் நிறுத் தப்படவுள்ளதாகவும் -

அதனால் அவர்கள் சிரமத்தை எதிர்கொள்ள நேரிடும் என்றும் -

ஆழிபேரலையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த பிரதேச செயலர்கள் தெரி வித்தனர். கொழும்பிலிருந்து வந்திருந்த மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளுக்கும் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் பிரதேச செயலர்களுக்கும் இடையேயான சந்திப்பு கடந்த 15ஆம் திகதி யாழ். செயலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவில் மூன்று கட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது வழங்கப்படவுள்ள 4ஆம் கட்டக் கொடுப்பனவை அரச உத்தியோகத்தர், ஓய் வூதியர் தவிர்ந்த ஏனையோருக்கு வழங்குமாறு அரசு அறிவித்துள்ளது. இந்நிலையில் அரச உத்தியோகத்தர்களும் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்கள்தான் என்பதை அரசு தெரிந்துகொள்ளவேண்டும். அரச உத்தியோகத் தர் மற்றும் ஓய்வூதியர்களும் ஆழிப்பேரலையால் பொருள் இழப்பு, உயிரிழப்பு போன்ற வற்றைச் சந்தித்துள்ளனர்.

எனவே, இவர்களுக்கான இந்தக் கொடுப்பனவு நிறுத்தப்படும்போது அவர்களும் பெரும் பிரச்சினையை எதிர்கொள்ள நேரிடும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-203-202)

## சோமவன்ஸ அமரசிங்கவின் உரையால் படையினருக்குப் பெரும் அவமானம்!

### சீறுகிறார் திஸ்ஸ அத்தநாயக்கா

இந்த நாட்டின் பாதுகாப்புக்காக உயிரையும் துச்சமென மதித்துப் பாடுபடும் படையினரை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமர சிங்க கூறியிருப்பது படையினருக்குப் பெரும் அவமானத் தையும், மனவேதனையையும் ஏற்படுத்தியுள்ளது. இந்தக் கூற்றை ஐக்கிய தேசியக்கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. சோமவன்ஸ இதுதொடர்பாகப் படையினரிடம் பகிரங்க மன்னிப்புக் கேட்கவேண்டும்.

- இவ்வாறு கூறினார் ஐக்கிய தேசிய கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்கா.

நேற்றுமுன்தினம் ஐக்கிய தேசியக்கட்சி கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவின் முதலாவது பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமர சிங்க முப்படையினரும் தமிழ், சிங்கள மக்களைக் கொலை செய்கின்றனர் எனவும், நாட்டின் பாதுகாப்பை உறுதிப் படுத்தத் தவறிவிடுகின்றனர் எனவும் அங்கு குற்றஞ்சாட்டிய தோடு அவர்களை வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்றும் முட்டாள்தனமாகப் பேசியுள்ளார்.

மேடையில் அமர்ந்திருந்த பிரதமரிடம் இதுதொடர்பான வேண்டுகோளையும் விடுத்துள்ளார். இவரது பேச்சு முழுப் பாதுகாப்புப் படையினருக்கும் அவமானமாக அமைந்துள் ளது. படையினரின் தியாகத்தைக் கொச்சைப்படுத்துவதாக இது உள்ளது.

இவரது பேச்சால் படையினர் மிகவும் மனவேதனை யடைந்துள்ளனர். ஒரு நாட்டின் தலைவரான பிரதமரை முன்னால் வைத்துக்கொண்டே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இது முழு நாட்டுக்குமே அவமானம்.

இந்தக் கூற்றை ஐக்கிய தேசியக்கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது. அத்தோடு, சோமவன்ஸ படையினரிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்கவேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறது- என்றார் திஸ்ஸ அத்தநாயக்கா.

## சிறுவர் தினக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,செப்.24

உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கும் மீள்குடியமர்ந் தோருக்குமான தேசிய பாதுகாப்பிற்கும் நிலையான தீர் வுக்குமான விசேட செயற்றிட்ட அலுவலகமும் மனித உரிமை கள் ஆணைக்குழுவும் இணைந்து சர்வதேச சிறுவர் தினத்தை யொட்டி யாழ். நகரில் கண்காட்சியொன்றை நடத்தவுள்ளன.

இக்கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிதொடக்கம் யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறும்.

கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே.கணேஸும் சிறப்பு விருந்தினராக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் செல் வக்குமாரனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

கண்காட்சியின் முடிவில் சிறுவர் நாடாளுமன்ற அமர்வு, கட்டுரை, நாடகம் ஆகிய போட்டிகளில் வெற்றிபெற்றவர் களுக்குப் பரிசில் வழங்கும் நிகழ்வும் கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

(ஒ-7)

## சித்தாந்த பண்டிதர் தேர்வுமுடிவுகள்

யாழ்ப்பாணம்,செப்.24

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் நடத்தப் பட்ட சைவசித்தாந்த பண்டிதர் தேர்வு முடிவு வெளியாகி யுள்ளது. அதன்படி பட்டம் பெற்றவர்கள் விவரம் வருமாறு:-

பிரவேச பண்டிதர் - செல்வி வீ.தவமணிதேவி (கொக் குவில்), செல்வி க.கல்பனா (பரந் தன்), செல்வி பூ.மேகனா (முழங்காவில்), செல்வி செ.விபூசணி (யாழ்ப்பாணம்) -

பாலபண்டிதர் - சபாநாதன் பாரதி (கோண்டாவில்), செல்வி ஜெ.ஜெயசித்திரா (காரைநகர்), செல்வி இ.சியாமினி (அச்சுவேலி), செல்வி த.சரோஜினிதேவி (யாழ்ப்பாணம்), சண்முகராஜா சிறிகாந்தன் (யாழ்ப்பாணம்), செல்வி ந. சிவானி (கந்தர்மடம்), த.அமலதாஸ் (யாழ்ப்பாணம்), செல்வி இ.திருலோகவதனி (கந்தர்மடம்), செல்வி செ. கோகிலா (கரவெட்டி), செல்வி க.சிவாஜினி (கரவெட்டி) -

சித்தாந்த பண்டிதர் - செல்வி க.விமலாவதி (இளவாலை), வெற்றிவேலு வரதிதாசன் (வட்டுக்கோட்டை). (ஒ-203)

## யாழ். பல்கலை பட்டமளிப்பு விழாவின் அங்கிகள் வழங்கும் ஒழுங்கு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.24

யாழ். பல்கலைக்கழகப் பொதுப் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற உள்ளவர்கள் பட்டமளிப்பு அங்கிகளைப் பெற் றுக்கொள்ளுமாறு பல்கலைக்கழகப் பதிவாளர் கேட்டுள்ளார்.

பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 6 ஆம், 7ஆம் திகதிகளில் பத்து அமர்வுகளாக நடைபெறவுள்ளது. இவ் விழாவில் நேரடியாகப் பட்டம் பெறுவோர் கீழ்க்குறிப்பிடப் படும் திகதிகளில் அங்கிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

வணிகமாணி - இன்று சனிக்கிழமை 9.30 தொடக்கம் 12 மணிவரையும் பிற்பகல் 2 மணிதொடக்கம் 4.30 வரையும் -

தொழில் நிர்வாகமாணி - நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 12 மணிவரையும் -

விவசாய விஞ்ஞானமாணி - பிற்பகல் 2 மணி தொடக் கம் 4.30 மணிவரையும் -

விஞ்ஞானமாணி - நாளைமறுதினம் காலை 9.30 மணி தொடக்கம் 12 மணிவரையும், பிற்பகல் 2 மணி தொடக்கம் 4.30 மணி வரையும் -

கலைமாணி - எதிர்வரும் 27ஆம், 28ஆம், 29ஆம் திகதிகளில் காலை 9.30 மணிதொடக்கம் 12 மணிவரையும் பிற்பகல் 2 மணிதொடக்கம் 4.30 மணிவரையும் -

மருத்துவமாணி - சத்திரசிகிச்சைமாணி- எதிர்வரும் முதலாம் திகதி காலை 9.30 மணி தொடக்கம் 12 மணிவரை யும் -

சித்தவைத்திய சத்திரசிகிச்சைமாணி- எதிர்வரும் முதலாம் திகதி பிற்பகல் 2 மணி தொடக்கம் 4.30 மணிவரையும் -

நுண்கலைமாணி (இராமநாதன் நுண்கலைக்கழகம்) - எதிர்வரும் 2ஆம் திகதி காலை 9.30 மணிதொடக்கம் 12 மணிவரையும் -

வவுனியா வளாகம் (அனைத்துப் பீடங்களும்) - எதிர் வரும் 2ஆம் திகதி பிற்பகல் 2 மணிதொடக்கம் 4.30 மணிவரையும் -

உயர் பட்டப் படிப்புகள் பீடம் - எதிர்வரும் 3ஆம் திகதி காலை 9.30 மணிதொடக்கம் 12 மணிவரையும், பிற்பகல் 2 மணிதொடக்கம் 4.30 மணி வரையும் -

பட்டம் பெறுவோர் மேற்கூறிய ஒழுங்கில் பட்டமளிப்பு அங்கிகளைப் பெற்றுக்கொள்ளு மாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-202)

# மக்கள் சேவையில்

வலி.தென்மேற்கு , செப்.24

நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டர் திஸ்ஸகுமார குணவர்த்தனா கடந்த முதலாம் திகதி தொடக்கம் அனலைதீவு அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியாக இடமாற்றம் பெற்றுள்ளார். தொல்புரம் அரசினர் மத்திய மருந்தகப் பொறுப்பதிகாரி கே.திருஞானசம்பந்தமூர்த்தி டாக்டர்களுக்கான சுழற்சி முறையிலான இடமாற்றத் திட்டத்தின் பிரகாரம் நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாகப் பதவி ஏற்றுள்ளார்.

(ஒ-135)

* * * *

வரணி,செப்.24

வரணி மத்திய மருந்தகத்தின் அபிவிருத்திச் சபைக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் நடைபெற்றது. வரணி பொது நிறுவனங்களின் தலைவர் க.சுப்பிரமணியக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அபிவிருத்திச் சபையின் தலைவராக டாக்டர் இரத்தினமும் செயலாளராக க.கோடீஸ்வரனும், தனாதிகாரியாக த.சின்னத்தம்பியும் தெரிவுசெய்யப்பட்டனர். மேலும் நிர்வாக உறுப்பினர்களாக 9 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

(ஒ-170)

* * * *

தென்மராட்சி,செப்.24

சாவகச்சேரி நகரசபையில் செயலாளராகக் கடமையாற்றிய மு.செ.சரவணபவ இலங்கை நிர்வாக சேவை வகுப்பு II தரம் II இற்கு பொது நிர்வாக அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கொழும்பு பொது நிர்வாக அமைச்சில் அடுத்தமாதம் மூன்றாம் திகதி தொடக்கம் ஒரு மாதத்திற்கு தொழிற்பயிற்சி பெறவுள்ளார்.

(ஒ-117)

* * * *

தென்மராட்சி,செப்.24

தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவில் நான்கு கிராம அலுவலர்கள் மீள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

கே.தில்லையம்பலம், பொ.செல்லையா, எஸ்.இராசதுரை, க.சுந்தரராசா ஆகியோரே மீள்நியமனம் செய்யப்பட்டுள்ளவர்களாவர்.

பிரதேசத்தில் தற்போது வெற்றிடமாகவுள்ள கிராம அலுவலர் பிரிவுகளில் இவர்கள் விரைவில் கடமையேற்கவுள்ளனர் என்று பிரதேச செயலக நிர்வாக அலுவலர் ச.வீரசிங்கம் தெரிவித்தார்.

(9-11)

# மக்கள் முகம்




கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அரசகாணிகள் பணிகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரான மயில்வாகனம் கதிர்காமநாதன் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களுக்கான ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நீண்டகாலமாக யாழ். செயலகத்தில் பணியாற்றிவந்த இவர் கடந்த வருடம் கிளிநொச்சி செயலகத்துக்கு இடமாற்றம் பெற்று அங்கு பணியாற்றிவருகின்றார்.

(3)

# நூல்வரிசை



| | | |
|---|---|---|
| நூல் | : | செய்யுட்கோவை (வினா - விடை தொகுப்பு) |
| நூலாசிரியர் | : | நாக. தமிழிந்திரன் |
| வெளியீடு | : | தமிழ் நூல் வெளியீட்டுப் பிரிவு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி |

தமிழ் ஆசிரியராகப் புகழ்பெற்ற நாகதமிழிந்திரன் செந்தமிழை வளர்க்க உலகிற்கு தொகுத்தளித்த இரண்டாவது நூலாக செய்யுட்கோவை வினா - விடைத் தொகுப்பு விளங்குகின்றது.

க.பொ.த.(உயர்தர) தமிழ் மாணவர்களின் பரீட்சை வெற்றியை நோக்காகக் கொண்டு செய்யுட்கோவை வினா விடை தொகுப்பு என்ற இந்நூலை தமிழ் அன்னையை வளர்த்தெடுக்க மாணவர்களுக்கு வழங்கியுள்ளார் நூலாசிரியர்.

இதுபகுதி I வினாப்பத்திரத்தில் சுமார் 60 புள்ளிகள் வரை பெறுவதற்கு மாணவர்களுக்கு முதுகெலும்புபோல் துணைநிற்கின்றது. அதுமட்டுமல்ல பரீட்சையில் இவ்வினாக்களை மாணவர்கள் எவ்வாறு அணுகுவது எவ்வாறு விடை எழுதுவது, விடை எழுதும் அளவு என்பவற்றை எல்லாம் ஒழுங்கு முறைப்படி செம்மையாக இந்நூலாசிரியர் தந்துள்ளார். மேலும் இந்நூல் குறுகிய காலத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்குத் துணை நிற்கக்கூடியவாறு காணப்படுகின்றது. இந்நூலானது க.பொ.த. (உயர்தர) மாணவர்களுக்கு பரீட்சை வழிகாட்டியாக அமையும். இந்நூலை பயன்படுத்தும் எவரும் உயர் பெறுபேறுகளை பெறுவார்கள். இந்நூலை தொகுத்து வெளியிட்ட நூலாசிரியரின் முதல் வெளியீடான திருவடிசூட்டுப் படலம் வினா - விடை தொகுப்பு இரண்டாவது பதிப்பையும் பெற்றுள்ளது. இரண்டாவது வெளியீடான செய்யுட்கோவை வினா - விடைத் தொகுப்பும் இரண்டாவது பதிப்பைப் பெறும் என்பது நிச்சயம்.

*யாழ்ப்பாணம்.*

- எஸ்.தர்சன்




| | | |
|---|---|---|
| நூல் | : | தமிழோசை |
| நூலாசிரியர் | : | ஆன்.தம்பியண்ணா |

யாழ்ப்பாணத்திலிருந்து புதிய சஞ்சிகை ஒன்று வெளிவர ஆரம்பித்திருக்கின்றது. 'தமிழ் ஓசை' என்ற பெயரில் அந்தச் சஞ்சிகை வெளிவந்துள்ளது.

பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளுக்கான வாசகர்கள் குறைந்துவிட்ட சூழ்நிலையிலும் தாங்கள் 'தமிழ் ஓசை' சஞ்சிகையை பெரும் நம்பிக்கையுடன் ஆரம்பித்துள்ளார்கள் என்று ஆசிரியப் பீடத்தினரே தமது பத்தியில் ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்பது இதன்மூலம் வெளிப்படுவதாகக் கருதலாம்.

ஆகவே, தனக்கென வாசகர்களை உருவாக்கிக்கொள்வதில் 'தமிழ் ஓசை' சஞ்சிகை முயற்சிகளை மேற்கொள்ளும் எனவும் எதிர்பார்க்கலாம். அதற்காக அவர்கள் கடுமையாகப் பாடுபட வேண்டியிருக்கும்.

முதலாவது இதழில் உள்ள படைப்புக்கள் அத்தனையும் அலசல்களாகவே உள்ளன. இலங்கையில் அடுத்த ஜனாதிபதி யார்? தமிழகத்தில் அடுத்த முதல்வர் யார்? ஈராக் உயிர்ப்பலிகளுக்கு முழுப்பொறுப்பும் புஷ், லண்டன் குண்டுத் தாக்குதல்களுக்கு காரணம் பிளயரா என்றவாறு பொது மக்களின் கருத்துக்களினூடாக விடயங்கள் அலசப்பட்டுள்ளன.

இனிவரும் இதழ்களில் பல்வேறு படைப்புகளும் இடம்பெறவுள்ளன என்று நூலாசிரியர் கூறுகிறார். இருபத்து நான்கு பக்கங்களில் வெளிவந்துள்ள இந்த நூலின் விலை 25 ரூபாவாகும். ஆக, ஒவ்வொரு பக்கங்களிலும் கனதியான விடயங்கள் இடம்பெறுவதை உறுதி செய்து கொள்ளவேண்டியது அவசியமாகும்.

'தமிழ் ஓசை' காலவரையறைகளுக்கு உட்பட்டு இப்போதைக்கு வெளிவராது; வசதியைப் பொறுத்து வெளிவரும் என்று இதழாசிரியர் கூறியிருப்பது 'சஞ்சிகைகளின் நிலை' குறித்த அவரது புரிதலைக் காட்டுவதாகிறது.

- இ.ராஜ்

# கிழக்கில் தமிழால் இணைந்த உறவு சீர்குலையாது பேணப்படவேண்டும்

**வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு நடத்தும் மீலாத் விழா இன்று முதல் மூன்று தினங்கள் சம்மாந்துறையில் நடைபெறவுள்ளது. தமிழ் - முஸ்லிம் இன ஒற்றுமையைப் பிரதிபலிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த விழா பற்றிய தொகுப்பு இது.**

தமிழால் ஒன்றுபட்ட தமிழர்களும், முஸ்லிம்களும் கிழக்கில் சமாதான சகவாழ்வு வாழ்ந்தமைக்கு நிறைய வரலாற்றுச் சான்றுகள் உண்டு.

1980களுக்கு முன்னர் இவ்விரு இனங்களும் எந்தவித வேறுபாடுமின்றி மிகவும் அன்னியோன்னியமாக வாழ்ந்து வந்திருக்கின்றன. பரஸ்பரம் புரிந்துணர்வும் மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்த இவர்களின் நல்ல உறவு நிலை மேம்பட்டிருந்தது.

பூகோளரீதியாகத் தமிழர்களும் முஸ்லிம்களும் வாழ்ந்த புவியல் நிலைமையும் அவர்களது வாழ்வு இரண்டறக் கலந்து பின்னிப்பிணைந்து வாழக் காரணமாயிற்று.

6ஆம் நூற்றாண்டில் அரேபியாவில் இஸ்லாம் ஸ்தாபிக்கப்பட்ட சமகாலத்தில் இலங்கைக்கும் அவர்கள் வர்த்தக நோக்கில் வரத் தொடங்கினர். அப்போது தமிழ் நாட்டிலும் இலங்கையின் கரையோரத்திலும் பேச்சு மொழி தமிழாகவே இருந்தது. எனவே அரேபியாவிலிருந்து வந்து குடியேறிய முஸ்லிம்களுக்குத் தமிழே தாய்மொழியாயிற்று.

அவர்கள் வரும்போது தனியாக வந்ததனாலும், இஸ்லாம் சமயக் கோட்பாட்டின்படி பலதார மணம் புரிய வாய்ப்பு இருப்பதாலும் முஸ்லிம்கள் தமிழ்ப் பெண்களை மணந்து வாழ்க்கை நடத்தினர்.

தமிழர் - முஸ்லிம் சமூகத்திடையே நடந்த கலப்புத் திருமணம் காரணமாக இன உறவு வலுத்திருந்தது. 'முக்குவர் சாதி' முறைமை பேணப்பட்டது. இன்றும் முஸ்லிம்களிடையே தங்கராசா, தம்பிராசா, சின்னத்தம்பி என்ற தமிழர் பெயர்கள் வழக்கில் இருந்து வருவதை கோடிட்டுக் காட்டலாம்.

தமிழர்களும், முஸ்லிம்களும் ஒன்றாகப் படித்தனர்; பழகினர். அப்போது தமிழர் பள்ளி, முஸ்லிம் பள்ளி எனப் பாகுபாடு இருக்கவில்லை. சுவாமி விபுலானந்தர் உருவாக்கிய கல்லடி சிவானந்தாவில் பயின்ற சம்மாந்துறை மஜீத், அமீர் அலி, மூதூர் மஜீத், நிந்தவூர் முத்துமிரான், கல்முனை அகமட், மன்சூர், மருதமுனையைச் சேர்ந்த மசூர் மௌலானா, ஏ.எம் மஜீத் போன்ற பலர் கொடிகட்டிப் பறந்தனர்.

ஒரே அலுவலகத்தில் ஒன்றாக இரு சமூகத்தினரும் பணியாற்றினர். பல்வேறு தொழில்களில் இணைந்து செயற்பட்டனர். சமய, சமூக கலாசார விடயங்களிலும் பரஸ்பரம் பங்கு பற்றித் தமது உறவுகளை வளர்த்துக்கொண்டனர்.

கல்முனைக்குடி கொடியேற்றப் பள்ளிவாசலுக்குப் பெருமளவு தமிழர்கள் செல்வதும், பாண்டிருப்பு திரௌபதியம்மன் ஆலயம், காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயம், சம்மாந்துறை ஸ்ரீ பத்ரகாளியம்மாள் ஆலயம் போன்றவற்றுக்கு முஸ்லிம்கள் செல்வ[illegible] வழக்கமான நிகழ்வுகள்.

கிழக்கில் பெரும்பாலும் தமிழாசிரியர்களே முஸ்லிம் பகுதிகளிலும் கல்வி வளர்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். இதனால் இவர்கள் மத்தியில் சமாதானமும், நல்லிணக்கமும் நிலவின. கிழக்கு வரலாற்றிலிருந்து தமிழர்களையும்

## கல்வியமைச்சின் மீலாத் விழா உணர்த்துவது இதுவே!

முஸ்லிம்களையும் பிரித்துப்பார்க்க முடியாது. தமிழர்கள் கடைப்பிடிக்கும் சாதிமுறை கூட முஸ்லிம்கள் சமூகத்தில் இடம்பிடிக்கிறது. அது சமயரீதியானதல்ல; சமூக அமைப்பின் ஓர் அம்சமே. முஸ்லிம்கள் பாரம்பரிய தாய்வழி ஆட்சி முறை அடிப்படையில் தமிழர்களின் பாரம்பரியமே.

அரசியலில் இரு இனங்களும் தமிழரசுக் கட்சியில் சேர்ந்தே இயங்கின. 1970ஆம், 1977ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் தமிழரசுக் கட்சியில்தான் முஸ்லிம் பிரதிநிதிகள் போட்டியிட்டு வெற்றிபெற்ற வரலாறும் உள்ளன. அகமட், மன்சூர், முஸ்தபா, மஜீத், தொப்பி முஹையதீன் போன்ற எம்பிக்கள் இன உறவில் கண்ணாயிருந்தனர். போராட்ட வேளைகளில் தமிழ் இளைஞர்களுக்கு அடைக்கலம் கொடுத்துப் பாதுகாத்த முஸ்லிம் குடும்பங்கள் இன்னும் உள்ளன.

### இன முரண்பாடு

இப்படியாக இருந்த நல்லுறவு 1983களின் பின்னர் அரசியல், விடுதலைப் போராட்டம் போன்ற பல்வேறு காரணிகளால் ஆட்டம் காண ஆரம்பித்தது. குறிப்பாகக் காணி விடயத்தில் பிரதான பாகமெடுத்தது.

பரவலாகப் பேரினவாத சக்திகளின் தலையீடு காரணமாக 1983, 1990, 1991, 1993, என்று இன வன்முறைகள் மூண்டன. பல வகையில் தமிழ்-முஸ்லிம் சமூகம் ஒருவரையொருவர் சந்தேகக் கண்கொண்டு நோக்கும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

ஆயுதங்கள் பரவலாக இன வன்முறைக்கும் இன விரிசலுக்கும் பயன்படுத்தப்பட்டன. தமிழ் இளைஞர்கள், முஸ்லிம் இளைஞர்களின் இரத்தக் கொதிப்பில் - இன உறவின் ஒரு கட்டத்தில் - எரித்தல், ஹர்த்தால் என்று ஊசலாடிக் கொண்டிருந்தது. அச்சத்தினால் இரு சாராரும் இடம்பெயர்ந்தனர்; நிம்மதி இழந்தனர்.

அவ்வப்போது வந்த அரசுகள் தமிழ் முஸ்லிம்களை பிரித்தாண்டு அவர்களுக்கான உரிமைகளை வழங்குவதிலிருந்து தப்பித்துக் கொண்டு வந்தன. அதற்கு அரசியலாளர்களும் துணைபோயினர். சில தமிழ் இயக்கங்களின் செயற்பாடுகளும் விரிசலுக்கு அடிகோலின. 1981இல் உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பத்தில் பெருந்தலைவர் அமைச்சர் அஷ்ரப் தலைமையில் அரசியலுக்காக முஸ்லிம் தனி அலகு என்றும், தமிழர் பகுதியைத் திட்டமிட்டுப் புறக்கணித்து பின்னடைய வைத்ததும் தமிழர்கள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தியது. இதற்கு அரசும், முஸ்லிம் அரசியல்வாதிகளும் துணைபோயினர்.

ஆனால், அதே அமைச்சர் அஷ்ரப் தேசிய ஐக்கிய முன்னணி (NUA) யை உருவாக்கிய இன ஐக்கியம் நிலவவேண்டுமெ[illegible] நேசக்கரம் நீட்டி தமிழ்மக்களையும் உள்வாங்கி சில அபிவிருத்தித் திட்டங்களையும் செய்தபோது விரிசலின் அளவு குறைய ஆரம்பித்தது.

பின்பு இன விரிசல் படிப்படியாகக் குறைந்து மீண்டும் இன உறவு வலுப்பெற்றது. அரசு-புலிகள் சமாதானப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட வேளையிலும் ஆழிப் பேரலைக்குப் பின்னரான நடவடிக்கைகளுக்கான முகாமைத்துவக் கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்ட வேளையிலும் முஸ்லிம்கள் தாம் புறக்கணிக்கப்பட்டுவிட்டோம் என உரக்கக் குரல் எழுப்பி ஆர்ப்பாட்டங்களைச் செய்தனர்; எதிர்ப்பைக் காட்டினர். எனினும் இவை தமிழர்களுக்கு எதிரானதல்ல என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், சகவாழ்வு மன்ற இணைப்பாளர் ஐ.எம்.இப்ராஹீம் ஆகியோர் கூறியதன் மூலம் இன உறவு சற்றும் பாதிப்படையவில்லை.

எது நடப்பினும் சில தமிழ் - முஸ்லிம் உறவுகள் இன்னும் வலுவாகத்தான் இருக்கிறது.

### விடுதலைப் புலிகளின் பகிரங்க அழைப்பு

பொதுக்கட்டமைப்பு உள்ளிட்ட பிரச்சினைகள் முஸ்லிம்களுக்கு இருந்தால் அவை தொடர்பாகப் பேசி பரஸ்பரம் புரிந்துணர்வுடன் தீர்க்கலாம் என விடுதலைப்புலிகள் முஸ்லிம் தலைவர்களுக்குப் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளனர். இது இப்பிரதேச தமிழ், முஸ்லிம் இன உறவில் ஆரோக்கிய நிலையைத் தோற்றுவித்துள்ளது. சில முஸ்லிம் அரசியல் தலைவர்கள் அரசியல் சுயலாபம் கருதி பேசுகின்ற பேச்சுக்கள் சிலவேளை இன உறவுக்கு குந்தகமாக அமைந்துவிடுகின்றதென புலிகளது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, இன உறவு என்பது அவ்வப்போது இடம்பெறும் அரசியல் ரீதியான பேச்சு, போராட்டம், ஹர்த்தால், ஆர்ப்பாட்டம் போன்றவற்றிலும் தங்கியிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. முஸ்லிம் தலைவர்கள் பேரினவாத சிங்களத் தலைவர்களை நம்புவதைவிட சகோதர தமிழ் தலைமைகளை நம்பி செயற்படின் பிரச்சினை தீர்வதோடு சமாதானமும் மலரும்.

26.12.2004 இல் ஆசியாவில் ஏற்பட்ட ஆழிப்பேரலை மீண்டும் இப்பகுதியில் தமிழ், முஸ்லிம் இன உறவை மிக பிணைத்து சென்றுள்ளது எனலாம். அந்தக் கணத்தில் சாதி, மத பேதங்களை மறந்து சம்மாந்துறை வாழ் முஸ்லிம் சகோதரர்கள், பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் சகிதம் தமிழ் மக்களை அரவணைத்து உபசரித்த விதம் உறவை மேலும் இறுக்கியது என்று துணிந்து கூறலாம்.

### இன்றைய தேவை

இருப்பினும் காணி, அபிவிருத்தி, தொழில் வாய்ப்பு, பங்கீடு போன்றவற்றினது பிரச்சினைகள் தீர்க்கப்படாமலிருந்து வருவது யதார்த்தமான, கசப்பான உண்மையே. அரசியல்வாதிகள் இனம், பிரதேசம் என்று செயற்படுவதும் ஆரோக்கியமானதல்ல. எது எப்படியிருப்பினும், இப்பிரதேச தமிழ், முஸ்லிம் நல்லுறவு இன்னும் வலுவாகக் கட்டியெழுப்பப்பட்டு அது தொடர்ந்து பாதுகாக் கப்படவேண்டும். அதற்காக இன, மதத் தலைவர்கள், கல்விமான்கள், கலாசாலைகள், ஊடகவியலாளர்கள் குறிப்பாக அரசியல்வாதிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து உழைக்கவேண்டும்.

**வி.ரி.சகாதேவராஜா**

**(உதவிக் கல்விப் பணிப்பாளர்)**

## பனைமட்டையால் வீதி விபத்து!

மோட்டார் சைக்கிளில் ஏற்றி வந்த பனை மட் [illegible] தியால், வந்த வாகனம் உரசியதால் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவர் வீழ்ந்து காயமடைந்தார்.

சரசாலையைச் சேர்ந்த கந்தசாமி முகுந்தன் (வயது 18) என்பவரே இச்சம்பவத்தில் காயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். (ஒ-117)


ஆலய காண்டாமணி மற்றும் ஆலய விக்கிரகங்கள்

பாரம்பரியமாக மணி வார்ப்பு வேலை செய்பவர்களால் சுத்தமான வெண்கலத்தில் செய்விக்கப்பட்ட ஆலய காண்டாமணி 25, 50, 75, 100, 125, 150, 175, 200, 225, 250 கிலோவில் எம்மிடம் விற்பனைக்கு உள்ளன. தேவையான எடை பிரமாணங்களிலும் ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம். இக்காண்டாமணிக்கு 25 வருட கால உத்தரவாதம் அளிப்பதோடு, தங்கள் ஆலயத்திற்கோ அல்லது தாங்கள் இருக்கும் இடத்திற்கோ கொண்டுவந்து கொடுக்கப்படும்.

மற்றும் ஆலய கருங்கல், வார்ப்பு விக்கிரகங்கள், பூஜை உபகரணங்கள், கலசம், திருவாசி, குடைகள் இந்தியன், இலங்கை பெரிய குத்து விளக்குகள் (அடி 1 - 5½ அடி வரை ) அங்கிகள், கொடிதம்ப கவசம் மற்றும் அனைத்து வார்ப்பு வேலைகளும் ஓடர் செய்துகொடுக்கப்படும்.

தொடர்பு:-

கே.வி.ஜி.டிறேட் சென்ரர்

இல.L.G.9, பீப்பிள்ஸ் பார்க், புறக்கோட்டை, கொழும்பு -11

தொ.இல. 011-2330922, 034-2236128

(சி-45244) (21-16-15)


## தீவக லயன்ஸ் கழக ஏற்பாட்டில் அல்லைப்பிட்டியில் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், செப்.24

ஊர்காவற்றுறை லயன்ஸ் கழகத்தின் (தீவகம்) ஏற்பாட்டில் அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் இன்று மூன்று நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இன்று காலை 9 மணிக்கு இலவச மருத்துவ முகாம், முற்பகல் 11 மணிக்கு வலயத் தலைவர் லயன் ரி.அன்பானந்தனை வரவேற்கும் நிகழ்வும் அதனைத் தொடர்ந்து மர நடுகையும் இடம்பெறும்.

நீரிழிவு பரிசோதனை, கண்பரிசோதனை, பொது வைத்தியப் பரிசோதனை இரத்த அழுத்தப் பரிசோதனை என்பன இலவச மருத்துவ முகாமில் இடம்பெறும். லயன் வி.திருச்செல்வத்தின் அனுசரணையில் இந்த மருத்துவ முகாம் நடைபெறும் என தீவக லயன்ஸ் கழகத்தின் செயலாளர், லயன் ஐ.கோ.சந்திரசேகரம் அறிவித்துள்ளார். (எ)

## செயற்றிட்டப் பயிலரங்கு

யாழ்ப்பாணம்,செப்.24

வடஇலங்கை சர்வோதயம் கொழும்பு மனிதநேய அமைப்புகளின் கட்டமைப்பின் அனுசரணையுடன் நடத்தும் சமாதானமும் அபிவிருத்திக்குமான செயற்றிட்ட பயிலரங்கின் 9 ஆவது பயிலரங்கு இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு புங்குடுதீவு வட இலங்கை சர்வோதய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் 'சமாதான ஒப்பந்தத்தின் பின் போர்நிறுத்த அமுலாக்கலும் மக்களின் இயல்பு வாழ்க்கையும்' என்ற தலைப்பில் யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் எஸ்.பரமநாதனும், 'சமாதான ஒப்பந்தத்தின் பின் ஆலய வளர்ச்சியும் ஆன்மீகத்தின் இன்றைய நிலையும்' என்ற தலைப்பில் மடத்துவெளி முருகன் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ மனோகரராசக் குருக்களும் உரையாற்றுவர். தொடர்ந்து சமாதானத்தை வலியுறுத்தும் கலைநிகழ்வுகளும் இடம் பெறும்.(ஒ-203)


டிஜிற்றல் போட்டோ கொப்பி

$A_4$- கறுப்பு வெள்ளை -3 ரூபா

$A_4$- கலர் 40 ரூபா

மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்

62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(F/45195) (39-21-15-16)


## பதவி வெற்றிடம்

லண்டனில் பல கிளைகளைக் கொண்ட 'MAK COST CUTTER (Pvt) Ltd' நிறுவனத்திற்கு யாழ்ப்பாணத்தில் பணியாற்றுவதற்கு Super Market [Con , Tell ] காசாளர், விற்பனை உதவியாளர் பணிகளிற்கு ஆட்கள் தேவை. தகமையுடையவர்கள் கீழ் உள்ள முகவரிக்கு 27.09.2005 இற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் தபால் மூலமே நேரிலோ விண்ணப்பங்களை அனுப்பலாம். (London English college இல.105, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.)

ஆண், பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

வயது எல்லை :- 20 – 35

கல்வித் தகைமை:-

1. க.பொ.த சாதாரண தரத்தில் ஒரே அமர்வில் தமிழ், கணிதம் உட்பட 05 திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தி.
2. க.பொ.த உயர்தரத்தில் 03 பாடங்களில் சித்தி
3. கணனி, ஆங்கில அறிவு எதிர்பார்க்கப்படுகிறது.

(C/45243) நிர்வாகி

ஓம்
ஸ்ரீ ராம ஜெயம்

## விசேட அறிவித்தல்

சனிப்பெயர்ச்சி காரணமாக கீழ்க்கண்ட சனிப்பெயர்ச்சி தோஷ நட்சத்திரக்காரர்கள், கறுப்புச்சிட்டி [கருஞ்சூளைச்சிட்டி], கறுப்புத்துணியில் எள்ளுப்பொட்டளி, நல்லெண்ணெய் ஆகியவை ஆலயயத்தில் பெற்று எள்தீபம் எரித்து, தோஷ நிவர்த்தி செய்துகொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| கறுப்புச் சிட்டி | 1 | ரூ 30 /= |
| எள்ளுப்பொட்டளி | 1 | |
| எண்ணெய் | 1 கறண்டி | |
| காணிக்கை | (ரூ 10/=உட்பட) | |

மேடராசி - அச்சுவினி, பரணி, கார்த்திகை நட்சத்திரத்தில் பிறந்தோருக்கு 4ஆம் இடம் (அர்த்தாஷ்டமம்)

மிதுனராசி - மிருகசீரிடம், 3ஆம் பாதம், 4ஆம்பாதம், திருவாதிரை, புனர்பூசம், 1ஆம், 2ஆம்,3ஆம் பாதங்கள் நட்சத்திரங்களில் பிறந்தோருக்கு ஏழரை ஆண்டுச் சனி கடைக்கூறு.

கடகராசி - புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம் நட்சத்திரங்களில் பிறந்தோருக்கு 7 அரை ஆண்டுச்சனி நடுக்கூறு

சிம்மராசி - மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம், நட்சத்திரங்களில் பிறந்தோருக்கு ஏழரை ஆண்டுச் சனி ஆரம்பம்.

தனுராசி - மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம், நட்சத்திரங்களில் பிறந்தோருக்கு ஏழரை ஆண்டுச்சனி ஆரம்பம்.

- ஆதீனமகாசபை.

ஸ்ரீ வேங்கடேசவரதராஜப்பெருமாள் தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.

(சி-45259) (26.15.16.21)

# மரண அறிவித்தல்

## திருமதி அந்தோனிப்பிள்ளை மேரி யோசேப்பின் (செல்லம்மா)



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி அந்தோனிப்பிள்ளை மேரி யோசேப்பின் அவர்கள் 22.09.2005 வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மனுவேற்பிள்ளை - அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும் யோசவ் சவுந்தரநாயகம் (வவுனியா), செல்வராணி (கனடா), கிறேஸ் (வவுனியா), புனிதம், மரியதாஸ் (கனடா), தங்கராசா (C.T.B), யோகன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், பபா (வவுனியா), காலஞ்சென்ற யோசவ்மகேந்திரன் மற்றும் றெஜீஸ் (வவுனியா), காலஞ்சென்ற யோசவ் சௌந்தரம் மற்றும் வனிதா (கனடா), றுக்மணி (உபதபாலகம், சில்லாலை) , சிறி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் சாமிநாதர், இம்மனுவேல், மாகிறேற், திரேசா புஸ்பம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் விஜி- சுதர்சன், விமல், சுரேஸ்-மலர், றமேஸ்- மாலா, காஞ்சனா, லங்கேஸ், பிரதீஸ், நிரோஸ், சதீஸ்,டொறின்-விமல், செறின், தினேஸ், அனந், நிலக்சன், நிருசன், ஜெனி, பிறாயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அலெக்சன், றொபின்சன், கிறிஸ்ரன் ஆகியோரின் பூட்டியும் நிர்மலன், நிரஞ்சன், டில்சா, பிரியாந்தி, குமரன், ஜெயந்தன், ஜெயந்தினி, சுவேந்தினி ஆகியோரின் பெரிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் இன்று (24.09.2005) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் சில்லாலை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செபஸ்ரியார் வீதி,
சில்லாலை, பண்டத்தரிப்பு.

(40351) (39-15-16)

தகவல்:
பிள்ளைகள்.

# அமெரிக்காவில் 'ரீட்டா' சூறாவளி இன்று காலை கரையைக் கடக்கும்!


## 10 லட்சம் மக்கள் இடம்பெயர்வு: 10 ஆயிரம் துருப்புக்கள் தயார் நிலையில்

லண்டன்,செப்.24

அமெரிக்காவின் லூசியானா மற்றும் டெக்ஸாஸ் மாநிலங்களின் கடற்கரையோரப் பகுதிகளை நோக்கி அசுர சக்தியோடு நகர்ந்து வரும் 'ரீட்டா' என்ற சூறாவளி இன்று காலை கரையைக் கடக்கும்போது பேரழிவை ஏற்படுத்தும் என அஞ்சப்படுகிறது.

மணிக்கு சுமார் 265 கிலோ மீற்றர் (சுமார் 165 மைல்) என்ற வேகத்தில் இச்சூறாவளி தாக்கும் என அஞ்சப்படுவதால் அதன் தாக்கத்துக்கு இலக்காகக்கூடிய சுமார் நானூறு மைல் அகல நிலப் பிரதேசத்திலிருந்து சுமார் பத்து லட்சத்துக்கும் அதிகமானோர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு ஒரே சமயத்தில் மக்கள் வெளியேறுவதால் அப்பிரதேச பிரதான சாலைகளில் அமெரிக்க சரித்திரத்திலேயே முன்னெப்போதும் இல்லாத வகையில் பெரும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளது. சுமார் நூறு மைல் நீளத்துக்கும் அதிகமான பாதையில் லட்சக்கணக்கான கார்கள் சாரிசாரியாக அணிவகுத்து நகரமுடியாமல் நெரிசலில் சிக்கி நிற்கின்றன.



அமெரிக்கக் கரையை நோக்கி நகரும் ரீட்டா சூறாவளியின் தோற்றத்தை காலநிலை அவதானிப்பு நிலையப் படங்கள் இவ்வாறு காட்டின.

வேகமான போக்குவரத்துக்குப் புகழ்பெற்ற டெக்ஸாஸில் வழமையாக முப்பது நிமிட நேரத்தில் கடக்கும் தூரத்தை 15 மணி நேரமாகியும் தாண்டமுடியாமல் சிரமப்பட வேண்டியிருப்பதாக ஒருவர் கூறினார்.


'கத்ரீனா' சூறாவளியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு பேரழிவுகளைச் சந்தித்த இப்பிரதேசங்கள், அந்தச் சோகத்திலிருந்து மீளமுன்னர் 'ரீட்டா' சூறாவளியின் பயங்கரப்பிடிக்குள் சிக்கும் அவல நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இந்தப் பேராபத்தை ஒட்டி ஏற்கனவே லூசியானா மற்றும் டெக்ஸாஸ் மாநிலங்களில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

புயல் பாதுகாப்பு முன்னேற்பாடுகளைக் கவனிக்க 10 ஆயிரம் இராணுவ வீரர்கள் தயார் நிலையில் டெக்ஸாஸ் மாநிலத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். டெக்ஸாஸ் மாநிலம் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் சொந்த மாநிலமாகும். புயல் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனிக்க நேரடியாக அவர் டெக்ஸாஸ் விரைந்துள்ளார்.

கத்ரீனா சூறாவளியை விட 'ரீட்டா' அதிக சேதத்தை ஏற்படுத்த வல்லது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(க)



அமெரிக்காவின் டெக்ஸாஸ் பிரதான வீதியில் பல லட்சம் மக்களின் இடப்பெயர்வால் ஏற்பட்டுள்ள வாகன நெரிசலை படத்தில் காணலாம்.

## லாகூர் குண்டு வெடிப்புகளில் அறுவர் பலி; 40 பேர் படுகாயம்

இஸ்லாமாபாத், செப்.24

பாகிஸ்தானின் லாகூர் நகரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இரு குண்டுவெடிப்புகளில் 6 பேர் உயிரிழந்ததுடன் 40 பேர் படுகாயமடைந்துள்ளனர். உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இரு குண்டுகளும் ஒரு மணிநேரத்திற்குள் அடுத்தடுத்து வெடித்தன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அமெரிக்காவின் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு பாகிஸ்தான் ஆதரவு அளித்து வருகிறது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தீவிரவாத அமைப்புகள் அவ்வப்போது பாகிஸ்தானில் வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில் லாகூரிலுள்ள மினார் - இ - பாகிஸ்தான் நினைவுச் சின்னம் அருகே நிறுத்தப்பட்டிருந்த சைக்கிளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் வீதியில் கடை அமைத்து வியாபாரம் செய்த இருவர் கொல்லப்பட்டனர். அருகிலுள்ள பஸ் நிலையத்தில் நின்றவர்களில் 8 பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நடந்த ஒரு மணி நேரத்திற்குள் லாகூரின் மத்திய பகுதியில் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள வர்த்தகப்பகுதியில் மற்றொரு குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. இதில் அப்பாவி பொதுமக்கள் நான்கு பேர் பலியாகினர். 32 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. பலியானவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அதிகாரிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

பாகிஸ்தான் தகவல் தொடர்பு அமைச்சர் ஷேக் ரஷீத் அகமது, குண்டுவெடிப்புச் சம்பவத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். குண்டுவெடிப்புக்கு காரணமானவர்கள் 'பாகிஸ்தானின் எதிரிகள்' என்றும் தெரிவித்துள்ளார்.

''குண்டு வெடிப்பு சம்பவத்திற்கு இது வரை எந்தவொரு தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. குண்டுவெடிப்பு நடத்திய தற்கான காரணமும் தெரியவில்லை''- என மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரி வித்தார்.

உலக அரங்கில்

(க)

## ஈராக்கில் எண்ணெய்க் குழாய் தகர்ப்பு!

பாக்தாத்,செப். 24

ஈராக்கின் எண்ணெய் விநியோக குழாய்ப் பாதைகள் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் அவைகள் தீப்பிடித்து எரிந்தன. முக்கியமான விநியோகப் பாதைகளே மேற்படி தாக்குதலுக்குள்ளாகினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு ஈரான் கிர்கித் நகரின் அருகே உள்ள எண்ணெய் விநியோகப் பாதைகள் நேற்றுமுன்தினம் அதிகாலை 3.30 மணியளவில் குண்டுத் தாக்குதலை தீவிரவாதிகள் மேற்கொண்டனர். இதனால், இப் பாதைகளில் பெரும் சேதம் ஏற்பட்டதாக ஈராக் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்தனர்.

பல்வேறு எண்ணெய்க்கிணறுகளில் இருந்து முதலாவது எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்துக்கு மசகு எண்ணெயைக் கொண்டு செல்லும் முக்கியமான பாதைகளே அவை - என தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து உடனடியாகத் தீயணைக்கும் பணியில் வீரர்கள் தீவிரமாக ஈடுபட்டனர்.

## விண்வெளியில் வைத்து விளம்பரப்படம் பிடிப்பு!

டோக்கியோ, செப் 24

விண்வெளி நிலையத்தில் விளம் பரப் படம் எடுக்க ஜப்பானிய உணவு தயாரிப்பு நிறுவனம் ஒன்று திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் தமது தயாரிப்புப் பொருளின் விற்பனையை அதிகரிக்கமுடியும் என அந்நிறுவனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

நூடில்ஸ் உணவுக்கான விளம்பரமே இதுவென தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் முதலாம் திகதி பிரத்தி யேக கமெராக்களுடன், ரஷ்யரொக் கெட் ஒன்று சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அனுப்பப்படவுள் ளது. ரஷ்ய விண்வெளி வீரர்கள் ஜப்பான் நூடில்ஸை விரும்பி உண் பது போல படம் எடுக்கப்படும். 'ஜப்பானின் கப் நூடில்ஸூக்கு எல்லைகள் இல்லை' என்பதை விளக்கும் வகையில் விளம்பரம் அமையும்.

இந்த விளம்பரப் படத்தை ரஷ்யாவின் விண்வெளிக் கட்டுப்பாட்டு மையம் மொஸ்கோவில் இருந்து கண்காணித்துப் பதிவு செய்யும். ஜப்பானின் விண்வெளி அமைப்பான 'ஜாக்ஸா' இதற்கான அறிவிப்பை டோக்கியோவில் கடந்த புதன்கிழமை வெளியிட்டது.

விண்வெளியில் படப்பிடிப்பு நடத்துவதற்கான திறன் வாய்ந்த கமெராக்களும், அதற்குரிய சிறப்பு அமைப்புகளும் செய்யப்படும். நிஸின் உணவு தயாரிப்பு நிறுவனம் இந்த விளம்பரத்தைத் தயாரிக்கிறது. இதற்கு எவ்வளவு செலவு பிடிக்கும் என்ற விவரத்தை அந்நிறுவனம் தெரிவிக்க மறுத்துள்ளது.


உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying



Head office
No:500,Galle Road,
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626

Jaffna office
No.86,PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600

Branch
No:14,New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979

Trinco Office
No.47,Kandy Road,
Trincomalee.
Tel:026-2221549
Fax:026-2221519

யாழ்⇆கொழும்பு | யாழ்⇆திருகோணமலை⇆கொழும்பு



Jayoda ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7217962 முதல் 7230114 வரை சீட்டிழுப்பு இல. 170 திகதி 22-9-2005

வெற்றி எண்கள் 3 6 1 0 5 9 சுப்பர் எண் 11

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,53,88,500/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,53,88,500/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 106 | 5,000/- | 5,30,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,051 | 500/- | 5,25,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,466 | 50/- | 5,23,300/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,03,729 | 10/- | 10,37,290/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 5,000/- | 55,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 103 | 1,000/- | 1,03,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,057 | 100/- | 1,05,700/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,372 | 20/- | 2,07,440/- |
| | | மொத்தம் | 45,87,230/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 51,89,830/- |

இந்த திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 15,679,550/-

அபிவிருத்தி லொத்தர் சபை

திருகோணமலை 7220952-2-05
இரத்தினபுரி 7222537-9-65
பொலன்னறுவை 7221146-1-27
கொழும்பு 7226552-7-76
கம்பஹா 7225744-0-00
களுத்துறை 7218373-5-63
கேகாலை 7224816-6-05
குருநாகல் 7226629-7-01

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

## க.பொ.த (உ/த) பரீட்சை - 2005

கணிதம்

| | |
|---|---|
| 1. கயிலாயபிள்ளை பிரகாஷ் | 3A |
| 2. முருகதாசன் மீரா | A, 2B |
| 3. பாலகிருஷ்ணன் சத்தியசுதன் | A, 2B |
| 4. சிவகுரு றதீபன் | A, 2B |

உயிரியல்

| | |
|---|---|
| 1. ஸ்ரீகரன் பரதன் (மாவட்டம் - 2ஆம் இடம், இலங்கை - 20ஆம் இடம்) | 3A |
| 2. ஜெயவீரசிங்கம் கல்யாணி | 2A, B |
| 3. தற்பரசுந்தரம் ஜெய்சுந்தர் | 3B |

வர்த்தகம்

| | |
|---|---|
| 01. நவரத்தினம் லோகிதா | 3A |
| 02. காசிநாதன் சோதிநாதன் | 2A, B |
| 03. கயிலாயபிள்ளை றஜீந்திரன் | 2A, B |
| 04. பாலசிங்கம் சிவகங்கை | 2A, B |
| 05. அரியரத்தினம் சஞ்சீப் | A, 2B |
| 06. மகாலிங்கம் தவகோகுலன் | A, 2B |
| 07. சிவப்பிரகாசம் சிவனேந்திரா | A, 2B |
| 08. அருட்சோதி ஸ்ரீரூபி | A, 2B |
| 09. பஞ்சாட்சரம் இந்துசா | A, 2B |
| 10. காசிநாதர் சஜந்தா | 3B |
| 11. தங்கராசா யஸ்மினா | 3B |

கலை

| | |
|---|---|
| 01. கதிர்காமத்தையன் சசிஜிலா | 3A |
| 02. செல்வராசா கலாவாணி | 3A |
| 03. மகேந்திரா மாலதி | 2A, B |
| 04. கிருஷ்ணபிள்ளை கருணாகரன் | 2A, B |
| 05. அழகேசன் பிரதீபன் | 2A, B |
| 06. நல்லதம்பி சுபேஜனா | 2A, B |
| 07. சுந்தரமூர்த்தி சுஜந்தினி | 2A, B |
| 08. இரவீந்திரன் சோபனா | 2A, B |
| 09. சண்முகராஜா சுகுணா | 2A, B |
| 10. கணேசநாதன் டயானா | 2A, B |
| 11. விநாயகமூர்த்தி கார்த்திகா | 2A, B |
| 12. மகாலிங்கம் அருணா | 2A, B |
| 13. தர்மலிங்கம் சாளினி | 2A, B |
| 14. சரவணமுத்து அனுசா | A, 2B |
| 15. மாணிக்கதியாகராசா சிவதர்சினி | A, 2B |
| 16. பொன்னம்பலம் பாமினி | A, 2B |
| 17. மகேந்திரன் சுபத்திரா | A, 2B |
| 18. சிவராசா நீருஜா | A, 2B |
| 19. நாகேஸ்வரநாதன் கசிந்தினி | 3B |

*திறமைப் பெறுபேறு பெற்ற இம்மாணவர்களையும், பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகைமைபெற்ற 205 மாணவர்களையும் அவர்களை வழிப்படுத்திய கல்லூரி அதிபர், ஆசிரியர்களையும், மாணவர்களின் பெற்றோர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**பழைய மாணவர் சங்கம்,**
**நூற்றாண்டு விழாச் சபை.**

(40368)(32-26-17)

# பருத்தித்துறையில் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம்,செப்.24

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்திவரும் ஜனசக்தி சுழல் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக ஜனசக்தி காப்புறுதி நிறுவன மாவட்ட உதவி விற்பனை முகாமையாளர் ஜெய்சன் ஜெயகுலராசா, யாழ்.மாவட்ட நடாளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசன் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாகக் கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன், வடமராட்சிப் பிரதேச விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பிரியன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

முதலில் இடம்பெறும் காட்சிப் போட்டியில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகமும் இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

இறுதியாட்டத்தில் வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக்கழகமும் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (3-410)

# உடற்கல்வி ஆசிரியர்களுக்கு

உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர்களுக் கான அவசர கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள கரியர் டொட் கொம் கல்வி நிறுவனத்தில் நடை பெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு தரம் 3 II இல் வழங்கப்பட்ட நியமனங்களை தரம் 3 I க்கு மாற்றுதல் தொடர்பாக கலந்துரையாடப் படவுள்ளதாகவும் - எனவே, உடற்கல்வி ஆசிரியர்கள் தமது சுயவிவரங்கள் மற்றும் டிப்ளோமா சான்றிதழ் என்பவற்றுடன் இந்தக் கலந்துரையாட லுக்கு வருகைதர வேண்டுமெனவும் - உடற்கல்வி டிப்ளோமா பட்டதாரிகள் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (ஒ-203)


## அரிய சந்தர்ப்பம்

தொலைத்தொடர்பு வாடிக்கையாளர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். உங்கள் இருப்பிடங்களில் இருந்தபடியே இன்ரநெற் வசதிகளைப் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

(சி/45264) 0777- 554528 (26-17)

## Kingston Personal Class Services

A/L கணித, பௌதிகவியல் பாடங்களும் O/L கணித, விஞ்ஞான பாடங்களும் இளஞ் சமுதாயத்தினரால் கற்பிக்கப்படுகின்றன.

தொடர்புகளுக்கு:- 0777 448287

(40363) (26-17)


மாதகல், சில்லாலை, சாந்தை, பண்டத்தரிப்பு, இளவாலை ஆகிய பகுதிகளிலுள்ள பொது அமைப்புகளின் வேண்டுகோளுக்கமைய

We Serve

## மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் நடத்தும்

## மாபெரும் இலவச மருத்துவ/கண்பார்வை பரிசோதனை முகாம்

காலம்: 25.09.2005 (ஞாயிறு) காலை 8.30 மணிமுதல்
இடம்: விக்னேஸ்வரா வித்தியாசாலை- மாதகல்

சேவையாற்றவுள்ள சிரேஷ்ட மருத்துவ அதிகாரிகள்

**பொது மருத்துவப் பிரிவு**

1. லயன் வைத்திய கலாநிதி **நவமலர் கனகரத்தினம்** (MBBS)
[முன்னாள் பணிப்பாளர்- யாழ்.போதனா வைத்தியசாலை]
2. லயன் வைத்திய கலாநிதி **K.இரத்தினசிங்கம்** (MBBS)
[சிரேஷ்ட வைத்திய அதிகாரி- யாழ்.போதனா வைத்தியசாலை]
3. வைத்திய கலாநிதி **S.சண்முகதாஸ்** (MBBS)
[அரசினர் வைத்தியசாலை- மருதங்கேணி]

**மகப்பேற்று பிரிவு**

1. வைத்திய கலாநிதி **கிருஷ்ணவேணி ஸ்ரீகிருஷ்ணன்** (MBBS)
[சிரேஷ்ட வைத்திய அதிகாரி- யாழ். போதனா வைத்தியசாலை]

**பொது சத்திர சிகிச்சைப் பிரிவு**

வைத்திய கலாநிதி **K.இளங்கோ** (MBBS)
[சிரேஷ்ட வைத்திய அதிகாரி- யாழ்.போதனா வைத்தியசாலை]

**முறிவு, நெரிவு பிரிவு**

வைத்திய கலாநிதி **A.அசோக்குமார்** (MBBS)
[சிரேஷ்ட வைத்திய அதிகாரி- யாழ்.போதனா வைத்தியசாலை]

மருத்துவ பரிசோதனைக்கமைய மருந்துகள் யாவும் இலவசமாக வழங்கப்படும். அத்துடன், இரத்தம், சலரோக பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு ஆலோசனைகளும் வழங்கப்படும்.

**கண்பார்வை பரிசோதனை**

இம் முகாமில் பிரபல "துஷா" மூக்குக்கண்ணாடி ஸ்தாபனத்தினரால் கண்பார்வை பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வசதி குறைந்தவர்களுக்கு மட்டும் **எம்மால் கண்ணாடி** வழங்கப்படும்.

குறிப்பு: 1. மாதகல், சில்லாலை,சாந்தை, பண்டத்தரிப்பு, இளவாலை மற்றும் அயல் கிராமங்களில் வசதி குறைந்த மக்களை பயன்பெறும்படி வேண்டுகின்றோம்.
2. உரிய நேரத்திற்கு சமூகம் தந்து ஒத்துழைக்கும்படி வேண்டுகின்றோம்.

லயன் ச.ஸ்ரீநிவாசன்
கழகத்தலைவர்.

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம்

லயன் எஸ்.எஸ்.தங்கராஜா
சேவை இணைப்பாளர்/ செயலாளர்.

# எமது உரிமை வேண்டி அணி திரள்வோம்

நாம் எமது உரிமையை வென்றெடுப்பதற்காகவும் தமிழ்த் தேசத்தின் நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக்காட்டவும் விடுதலைப் புலிகளே எமது ஏக பிரதிநிதிகள் என உலகிற்கு எடுத்துரைக்கவும் எதிர்வரும் 30.09.2005 வெள்ளிக்கிழமை

"அனைவரும் வாரீர் அகிலத்திற்கு எம் உரிமையைக் கூறுவோம்"

## தீவக உழவு இயந்திர உரிமையாளர் சங்கம்.

(40368)(24-26-17)

# மரண அறிவித்தல்

## இராசையா சண்முகநாதன்



அரியாலை 62, ஆனந்தன் வடலி வீதியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சண்முகநாதன் அவர்கள் 14-09-2005 புதன்கிழமை லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்டிதர் சி.இராசையா- ஆசிரியை தங்கலட்சுமி தம்பதியினரின் இளையமகனும் லோகேஸ்வரியின் அன்புக் கணவரும் யாழினி, தர்ஷினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகேசன் (கனடா) காலஞ்சென்ற திருமதி பவானி இரத்தினசுந்தரம் மற்றும் இராதாதேவி பத்மநாதன், ஸ்ரீதரன் (லண்டன்) ஆகியோரது பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25-09-2005) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**12 , 2/5, றோகினி வீதி,**
**கொழும்பு - 06.**

T.P.: 0112594919 (கொழும்பு) (40360)(26-17)
021 222 963 (யாழ்)

தகவல்:
திருமதி இராதாதேவி பத்மநாதன்
*(சகோதரி).*


# வேலை பயிலுநர் தேவை

கொக்குவில் - பிறவுண் வீதியில் அமைந்துள்ள



## ரயர் நிரப்பும் தொழிற்சாலைக்கு பயிலுநர்கள் தேவை

எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்.



**நோர்தேண் இண்டஸ்றீஸ் (பி) லிமிட்**
**69, பிறவுண் வீதி - கொக்குவில்.**

**லயன். இ.சிவஞானம்** (ஆவரங்கால் கிழக்கு)
அவர்களின் அனுசரணையுடன்
**அமரர் லயன். வே.சின்னத்துரை**
(உரும்பிராய் அரிமாக்கழக முன்னாள் தலைவரும்,
இளைப்பாறிய சிரேஷ்ட கிராம அலுவலரும்)
**அவர்கள் ஞாபகார்த்தமாக**
*அச்சுவேலி வட்ட லயன்ஸ் கழகம் நடத்தும்*

## இலவச மருத்துவ முகாமும் மரம் நாட்டும் வைபவமும்

இடம்: யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம், வாதரவத்தை
காலம்: **25-09-2005 ஞாயிற்றுக்கிழமை**
நேரம்: *காலை 9 மணி - 10 மணி - மரம்நாட்டும் வைபவம்*
*மு.ப.10.30 மணி - 1.30 மணி - மருத்துவ முகாம்*

பொது வைத்தியப்பரிசோதனை, சல, இரத்தப் பரிசோதனை மற்றும் நீரிழிவு நோய்த் தடுப்புக்கான ஆலோசனை, விழிப்புணர்வுக் கருத்துரைகள் ஆகியன இடம் பெறும்.

அனைவரும் வருக. நன்மை பெறுக.

**செயலாளர்.** (40373)(30-11-45) **தலைவர்.**

## அச்சுவேலி வட்ட லயன்ஸ் கழகம்.

## இந்துசமய ஆராய்ச்சியாளர் / திட்ட அலுவலர்

அகில இலங்கை இந்துமாமன்றப் பணிக்கு ஓர் இந்து சமய ஆராய்ச்சியாளர் / திட்ட அலுவலர் உடனடியாகத் தேவை.

நேர்முகப் பரீட்சைக்கு: 071-2723456 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

(அ/45268)(30-11-45)

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவன வளர்ச்சியின் ஆரம்பகால இந்துநாகரிகத்துறை ஆசிரியர் கலாநிதி

**காரை. S.சுந்தரம்பிள்ளை**

அவர்களின் திடீர் மரணச் செய்தி கேட்டு கலங்கி நிற்கின்றோம்.
அன்னாரின் இழப்பால் துயரில் மூழ்கி இருக்கும் குடும்பத்தவரிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்திபெற வேண்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
**விக்னா கல்வி நிறுவனம்.** (40374) (30-11-45) **ஊழியர்கள்.**

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் கனகசபை



[சிவகாமி அம்பாள் சோதிட நிலையம், சித்தன்கோணி] வட்டு.மேற்கைப் பிறப்பிடமாகவும் சித்தன் கேணியை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கனகசபை 22-09-2005 வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் வியாலாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை-செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் நேசம்மாவின் அன்புக்கணவரும் ரஞ்சிதகௌரி, தேவச்சந்திரன் யோகச்சந்திரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் ரவீந்திரன், சிவசக்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் ரஜந்தன், ரமிலா, ரயூரன், ரஜிவர்மன், உமாசங்கர்,கஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் மனோ ன்மணி, கணபதிப்பிள்ளை, மகாதேவன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அமரர் பரமசிவம், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25-09-2005)ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திறகு எடுத்துச்செல்லப்படும். இந்தத் தகவலை உற்றார் உறவினர்,நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

அடைக்கலந்தோட்டம் கந்தசுவாமி கோவிலடி
வட்டுக்கோட்டை. (45541)
தகவல்:-மருமகன்
(ஜிலானி தொலைத்தொடர்பகம்.சித்தன்கேணி

## கார்த்திகேசு சிதம்பரநாதன்

(முன்னாள் விடுதி மேற்பார்வையாளர், யாழ். இந்துக் கல்லூரி)



தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் சங்கரத்தையை வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சிதம்பரநாதன் நேற்று (23.09.2005) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான P.M.வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற லீலாவதியின் அருமைக் கணவரும் வத்சலா (கனடா), உஷாதேவி , குருபரன் (குரு போட்டோ, வீடியோ) ஆகியோரின் அன்புத் தந்தையும் புவிந்திரகுமார் (கனடா) அவர்களின் அன்பு மாமனாரும் புகலியா, ஆருசியா, அச்சுதன், கிருசாந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சண்முகநாதன், இராசம்மா (ஆஸ்திரேலியா), ஜெகநாதன் (முன்னாள் அதிபர், நியூசிலாந்து), வள்ளிநாயகி அம்மா (வட்டு. கிழக்கு), சரஸ்வதி அம்மா (ஆஸ்திரேலியா), காசி விஸ்வநாதன் (கனடா), கனகாம்பிகை அம்மா (கொழும்பு), பஞ்சாட்சரநாதன் (திருகோணமலை), சிவகாம்பிகை அம்மா (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பத்மாவதி (இளைபாறிய ஆசிரியை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), புஸ்பவதி, காலஞ்சென்ற பரமேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.09.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்கரத்தை.* (40366)(30-11-45) *தகவல்:* **குருபரன்**
தொ.பே. இல.: 0777111441, 0776412629. (குரு போட்டோ & வீடியோ)

# மரண அறிவித்தல்கள்

## சின்னராசா சரஸ்வதி

(ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியர்)



புங்குடுதீவு, 2ஆம் வட்டாரம் மாரியம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் 65, ராணி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராசா சரஸ்வதி 22.09.2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சிவாஜினி (பவா),சிறிசங்கர் அவர்களின் அன்புத் தாயாரும் சின்னராசாவின் மனைவியும் முத்துகிருஷ்ணனின் அன்பு மாமியாரும் பிரசாந், காயத்திரி, நாகவக்சலன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.09.2005) வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*65, ராணி வீதி,*
*நல்லூர்,* (40384)(30-11-45)
*யாழ்ப்பாணம்.*
*தகவல்:* **சின்னராசா (கணவர்).**

## பொன்னையா கனகசபாபதி (PK)

(பிரபல வர்த்தகர் - மத்தியசந்தை, 110, கணேசன் ஸ்ரோர்ஸ், கண்டி)

பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் கண்டியை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா கனகசபாபதி (PK) 22.09.2005 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற பொன்னையா - கண்மணி தம்பதியரின் ஏக புதல்வனும் முத்துலச்சுமியின் அன்புக் கணவரும், திருமதி சதாசிவம் திலகவதி, காலஞ்சென்ற சுப்பிரமணியம் மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் குகனேசன் (சுவிஸ்), செந்தில்குமார், வாசுகி (ஜேர்மனி), அருண்குமார், சிவநேசன் (கண்ணன்), சுதாகரன் (சுதன்), சுதர்சன், சுதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் அமுதா (சுவிஸ்), செந்தில்குமார் (ஜேர்மனி), விஜிதா, சிவாஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும் நிரோஜன், நிரோசா, அபிராமி ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், கணேச மூர்த்தி, ஸ்ரீதரன், கௌரி, கோதை, ரேவதி, தயாபரன், திருமதி அருட்செல்வம், குகப்பிரியை, மனோகரன், சத்தியப்பிரியை, வசந்தப்பிரியை, திருமதி சபாரத்தினம் கவிப்பிரியை, ஹரிகரன், ஜெயப்பிரியை ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.09.2005) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, ஊறணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(கி-45273)(30-11-45) **தகவல்:-**
**கந்தகுமார்** (நந்தன் - மருமகன்).

## மாணிக்கவாசகர் சிற்சபேசன்

(இலங்கை வங்கி 2ஆவது கிளையின் பதவி நிலை உத்தியோகத்தர்)

இல. 7, நல்லூர் செட்டித்தெருவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கவாசகர் சிற்சபேசன் நேற்று (23.09.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நல்லூர். **தகவல்:-**(40385)(30-11-45)
**சி.சுபாஜினி (சுபி-மனைவி)**


**ராஜா** யாழ்ப்பாணம்
2ஆவது ஜனத்திரள் வாரம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
நியூ புகழ் எஸ்.ஜே.சூர்யா, நிலா நடித்த
**அன்பே ஆருயிரே**
காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.
குளிரூட்டப்பட்டது.
மணிகண்டன், சிம்ரன்,
ஜெய் ஆகாஷ் மற்றும் பலர் நடித்த
**கிச்சா வயது 16**
கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)
(கி-43563)

**மனோகரா** யாழ்ப்பாணம்
சிம்பு, கோபிகா நடித்த
**தொட்டி ஜெயா**
காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30.
(கி-44110)

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்
ரவிகிருஷ்ணா, கோபிகா, ரேவதி நடித்த
**பொன்னியின் செல்வன்**
காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(சீலன்)
25 முதல்
**ஒருநாள் ஒரு கனவு**


## வணங்கி அஞ்சலி செய்கின்றோம்



எங்கள் கலாசாலையின் முன்னாள் அதிபர்

**கலாநிதி கவிஞர் காரை.**
**செ.சுந்தரம்பிள்ளை**

அவர்களின் மறைவுச் செய்தியறிந்து மிக்க துயரடைகின்றோம். அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வணங்கி அஞ்சலி செய்கின்றோம்.

**கோப்பாய் ஆசிரிய கலாசாலைக் குடும்பம்.**

(40370)(30-11-45)

# மரண அறிவித்தல்கள்

## சதாசிவம் இரத்தினசிங்கம்

(யாழ். போதனா வைத்தியசாலை முன்னாள் ஊழியர்)



யாழ். அரியாலை, திருமகள் வீதியைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தி நாவலர் வீதியையும், ஸ்ரான்லி வீதியையும் வசிப்பிடங்களாகவும் கொண்ட சதாசிவம் இரத்தினசிங்கம் அவர்கள் நேற்று (23.09.2005) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்தரை அடைந்துவிட்டார்.

அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் கேதீஸ்வரன் (யாழ். போதனா வைத்தியசாலை), மகேஸ்வரன் (ஆசிரியர்- Uyarapulam M.T.M. School, N.D.E. 2nd Year A.T.I), ரமேஸ்வரன், சுமதி, நிர்மலா, புஸ்பலதா ஆகியோரின் அன்புத் தந்தையும் சகாயராஜா (பாரத் உணவகம்), பிரதாபன், ஜெகநாதன், தயா, ராஜி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (24.09.2005) சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*86/2, ஸ்ரான்லி வீதி,* (40383)(30-11-45) *தகவல்:*
*யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 5473* **குடும்பத்தினர்.**

## சுவானி அகஸ்ரின்

(அல்லைப்பிட்டி கிராம பொதுத்தொண்டர்)



அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுவானி அகஸ்ரின் அவர்கள் 22.09.2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சுவானி - மார்த்தம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் றொசலின் அன்புக் கணவரும் றெஜி, ஜெசி (இந்தியா), ஜெயசித்திரா, காலஞ்சென்ற ஜெயதாஸ், சுகந்தி, சுகந்தன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் அன்ரனிதாசின் அன்பு மாமனும் றெக்சன், றெமிசியன், டெவிற்சன், ஜென்சன், ஜென்சி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (24.09.2005) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3 மணிக்கு அல்லைப்பிட்டி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*2 ஆம் வட்டாரம்,*
*அல்லைப்பிட்டி.* (40377)(30-11-45)
*தகவல்:* **மகன்** (றெஜி).

## மாணிக்கம் அருளானந்தம்



தையிட்டி, வள்ளுவர்புரம் காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் பூங்கா வீதி, குருநகரை வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கம் அருளானந்தம் நேற்று (23.09.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தங்கம், குயின் ஆகியோரின் அன்புக் கணவரும் நெல்சன், டயஸ், ஆனந், அமலன், சாந்தி, செல்வி, சைலா, சுலோசனா, தனுசியா, நீர்மலா (இளவாலை, கன்னியர் மடம் ம.வி.), ஜிவா, சுபா (யாழ். இளவாலை கென்றியரசர் கல்லூரி), சதா (சாள்ஸ், மகாவித்தியாலயம்), அருள்பிரகாஸ் (காப்பாளர் வ.பி.போ.சபை, கோண்டாவில்), மாவீரர் லெப்.குமுதா (றஞ்சினி), போராளி மணிமொழி (கல்பனா - மகளிர் கலைபண்பாட்டுக் கழகம், மாலதி படையணி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (25.09.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*23/2, பூங்கா வீதி,* *தகவல்:*
*குருநகர், யாழ்ப்பாணம்.* (40379)(30-11-45) **பிள்ளைகள்.**

## மனுவற்பிள்ளை பெனடிற்

36/3, கோயில் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் வத்தளையைத் தற்போது வசிப்பிடமாகவும் கொண்ட மனுவற்பிள்ளை பெனடிற் அவர்கள் நேற்று (23.09.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனுவற்பிள்ளை - மரியப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் லூர்த்துமேரியின் அன்புக் கணவரும், அமலதாஸ் (இங்கிலாந்து), அன்ரனீற்றா (இங்கிலாந்து), குமார் (ஜேர்மனி) ஆகியோரின் தந்தையும் ரஜனி (இங்கிலாந்து), தேவராஜன் (இங்கிலாந்து), பவானி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் அனோஜா, கிளமண்ட், அமண்டா, ஆரோன், நிந்தியா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (25.09.2005) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணியளவில் வத்தளை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*19, ஸ்ரீவிக்ரம ஒழுங்கை,* *தகவல்:*
*ஸ்ரீவிக்ரம மாவத்தை, கொழும்பு.* **M.இக்னேசியஸ்**
தொ.பே. *0114 810173* (40381)(30-11-45) **(மருமகன்).**

# தபால் மூல வாக்காளர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,செப்.24

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்போர் அது தொடர்பான விண்ணப்பங்களை எதிர் வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் அந்தந்த தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்று தேர்தல் திணைக் களத்தின் யாழ். மாவட்ட அதிகாரி கேட் டுள்ளார்.

விண்ணப்பங்கள் யாவும் 2004 தேர் தல் டாப்பில் உள்ள விவரங்களின்படி பூர்த்திசெய்யப்பட்டு அத்தாட்சிப் படுத் தும் அதிகாரியால் அத்தாட்சிப்படுத் தப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-202-203)

## சமாதானப் பேச்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீவிரமாக நடந்துகொண்டிருக்கின்றபோதிலும் அவை புலிகளுடனான சமாதானப் பேச்சு நடத்தும் எமது முயற்சியில் எவ்வித பாதிப் பையும் ஏற்படுத்தா முடியுமானவரை மிக விரைவில் பேச்சுகளைத் தொடங்கவே நாம் விரும்புகிறோம்.

இதற்கமைய நேற்றுமுன்தினம் சமாதான ஏற்பாட்டாளர்களான நோர்வேத் தூதரக அதி காரிகளை அரசுத் தரப்பினர் சந்தித்துப் பேசி னர். முடியுமானவரை விரைவில் பேச்சுக் கான ஏற்பாடுகளைச் செய்து தருமாறு நோர் வேத் தூதரக அதிகாரிகளை எமது அரசு கேட்டுக்கொண்டுள்ளது. இது தொடர்பான முயற்சியில் தாங்கள் மிகவும் தீவிரமாக இருக் கிறார்கள் என நோர்வேத் தரப்பினர் தெரி வித்துள்ளனர். எனவே, விரைவில் இவ்விட யம் கைகூடும்.- என்று தெரிவித்தார் அமைச் சர் நிமால் சிறிபால டி சில்வா. (ஐ-க)

## கொழும்பு கோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ததாக ஆணைக்குழுவின் செயலாளர் சந்திரா ஜயதிலக தெரிவித்தார்.

'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' விவகாரம் எதிர்வரும் புதன்கிழமை கொழும்பு கோட்டை நீதிவான் முன் விசாரணைக்கு எடுக்கப்பட விருக்கையிலேயே அந்த நீதிமன்ற நீதிவான் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டிருக்கி றார்.

ஆனால், அந்த நீதிவானுக்கு எதிராக உள்ள சில முறைப்பாடுகள் குறித்தும் அவரது நடத்தை குறித்தும் விசாரணை செய்வதற்கு ஏதுவாகவே இந்த இடமாற்றத்தை வழங்கு வதற்கு நீதிச்சேவை ஆணைக்குழு முடிவுசெய் தது என்றும்-

அவருக்கு எதிரான விடயங்கள் குறித்து விசாரணை செய்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ரஞ்சித் சில்வா நியமிக்கப் பட்டிருக்கின்றார் என்றும்-

நீதிச்சேவை' ஆணைக்குழுவின் செயலா ளர் தெரிவித்தார்.

ஆனால், இந்தத் திடீர் இடமற்ற உத்த ரவை கொழும்பு கோட்டை நீதிவான் நீதி மன்ற சட்டத்தரணிகள் கடுமையாக ஆட்சேபித் துள்ளனர். இது நீதித்துறைக்கும், நீதிமன்றங் களுக்கும் இழுக்கை ஏற்படுத்தும் செயல் என்று சங்கத்தின் செயலாளா சிராஜ் நூர்தீன் நேற்று நீதிச்சேவை ஆணைக்குழுவின் தலை வரும், பிரதம நீதியரசருமான சரத் என். சில் வாவுக்கு அனுப்பியுள்ள முறையீட்டில் தெரி வித்துள்ளார்.

சர்ச்சை எதிலும் சிக்காமல் ஒழுங்காகப் பணி யாற்றிவந்த ஒரு நீதிவானுக்கு எதிராக முறைப் பாடுகள் இருப்பதாகக் கூறி அவரைத் திடீர் இடமாற்றம் செய்வது கண்டனத்துக்குரியது என அந்த முறையீட்டில் தெரிவிக்கப்பட் டுள்ளது. அந்த இடமாற்றத்தை ரத்துச் செய் யும் படியும் அதில் கோரப்பட்டுள்ளது.

(ஐ-க)

NEW SCIENCE CENTRE
யாழ்நகர்.
ORGANIC பிரிவு 11
Mon. Fri. - 12 - 1
ஆரம்பம்: - 23-09-2005 Fri. - 12
INORGANIC பிரிவு 111
ஆரம்பம்: - 24-09-2005 இன்று
Sat., Sun. - 12 - 1
வெப்ப இரசாயனம்
ஆரம்பம்: - 24 -09-2005 இன்று
Sat., Sun. - 10 - 11
இரசாயனச் சமனிலை
Sat, Sun - 11 - 12 (40388)
By:- அன்பழகன் B.Sc.

## முகமாலையில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு தடுத்துவைக்கப்பட்ட இந்த மாணவன் முற்பகல் 11 மணியளவில் படையினரின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டான்.

சம்பந்தப்பட்ட மாணவனை வழிமறித்த படையினர், புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட தகடு ஒன்றை வேண்டுமென்றே பலவந்தமாக மாணவனின் பேர்ஸுக்குள் வைத்துவிட்டு அதைக் காரணங்காட்டி அவனை வழிமறித் தனர் என்றும், தடுத்துவைத்திருந்த சமயம் சிங்களதில் எழுதப்பட்ட ஒரு காகிதத்தில் ஒப்ப மிடுமாறும் அந்த மாணவன் வலியுறுத்தப் பட்டான் என்று தெரிவிக்கப்பட்டது.

மாணவன் தடுத்துவைக்கப்பட்டதும் பெரும் எண்ணிக்கையில் சக மாணவர்கள் படையெடுத்து வந்ததால் முகமாலைப் பகுதி யில் சிறிதுநேரம் பதற்றம் ஏற்பட்டது.

படையினரின் இந்தக் கைது நடவடிக்கை தொடர்பாகப் பல்கலைக்கழக மாணவர்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டனர்.

இதனையடுத்து கண்காணிப்புக் குழுவின ரும் யாழ். மாவட்ட தமிழ்க் கூட்டமைப்பு நாடா ளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரனும் முக மாலைக்குச் சென்று படையினருடன் உரை யாடினர்.

படையினரின் இவ்வாறான செயல்களை வன்மையாகக் கண்டிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தெரிவித்தார்.

(ஐ-8-12)

## மலையகப் பகுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னால், எழுந்த சர்ச்சையை அடுத்து சில முக் கியமான தீர்மானங்களையும் எடுக்க எஸ்.பி திஸநாயக்க தீர்மானித்திருந்தார் என்று கூறப் படுகிறது.

இந் நிலையில், நேற்றுமுன்தினம் திஸ நாயக்கவை சிறையில் சந்தித்த ஐக்கிய தேசி யக் கட்சியின் முக்கிய தலைவரொருவர் இந் தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காகப் புதிய பதவியொன்றை அவருக்கு வழங்கு வதற்கு கட்சி தீர்மானித்துள்ளது என அவரி டம் தெரிவித்திருக்கிறார்.

இதன்படி, பெருந்தோட்டப் பகுதிகளைக் கணிசமாகக் கொண்டுள்ள மத்திய, ஊவா, சப் ரகமுவ மாகாணங்களின் பல மாவட்டங் களைக் கண்காணிப்பதற்காக மலையகப் பகு திக்கான தலைவர் என்ற பதவி எஸ்.பி. திஸ நாயக்கவிற்கு வழங்கப்படவிருப்பதாகத் தெரிகிறது. (ஐ-க)

## இ.தொ.காவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பற்றிய சரியான முடிவை அறிவிப்பேன்.''

-இவ்வாறு நேற்று திட்டவட்டமாகத் தெரி வித்தார் இலங்கைத் தொழிலாளர் காங்கிர ஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினரு மான ஆறுமுகன் தொண்டமான். இவ்விவ காரம் குறித்து 'உதயனு'க்கு அவர் மேலும் கூறியதாவது:-

''ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இலங் கைத் தொழிலாளர் காங்கிரஸ் 19அம்சக் கோரிக்கைகளை நிபந்தனைகளாக முன்வைத் துள்ளது. இவற்றை ஏற்றுக்கொள்ளும் வேட் பாளருக்கே தனது ஆதரவு என்றும் இ.தொ.கா. கூறிவிட்டது. இந்நிலையில், நீங்கள் முன் வைத்த 19 அம்சங்களையும் ஐக்கியதேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஏற் றுக்கொண்டுவிட்டார் எனச் செய்திகள் வெளி யாகியுள்ளன. இவ்வாறான சூழ்நிலையில் இ.தொ.கா. - ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்குமா?''- என்று கேட்டபோதே ஆறு முகன் தொண்டமான் மேற்கண்டவாறு கூறி னார். இந்தியாவில் தங்கியிருக்கும் அவர் இவ்விவகாரம் குறித்து மேலும் கூறியதாவது:-

இந்த 19 அம்சக் கோரிக்கைகளை ஐக் கிய தேசியக் கட்சி மட்டும் ஏற்றுக்கொள்ள வில்லை. பிரதமருடன் எமது பிரதிநிதிகள் கதைத்தபோது அவரும் இந்த யோசனை களை ஏற்றுக்கொண்டார். அமைதிப் பேச்சு கள் உட்பட அனைத்து அம்சங்களையும் தாம் ஏற்கிறார் எனப் பிரதமர் எம்மிடம் கூறியி ருக்கிறார்.

எனவே, நாடு திரும்பியவுடன் இதுபற் றிய உரிய தீர்மானத்தை அறிவிப்பேன். அதற்கு முன் இரு பிரதான வேட்பாளர்களு டனும் தனித்தனியாகப் பேசலாமென்று எதிர் பார்த்துள்ளேன். ஊடகங்கள் என்ன கூறினா லும் கட்சியின் முடிவைத் தெரிவிப்பது நான் தான்.- இப்படிக் குறிப்பிட்டார் ஆறுமுகன் தொண்டமான். அவர் பெரும்பாலும் நாளை நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப்படு கின்றது. (ஐ-க)

# இராணுவக் கட்டுப்பாடற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு - கிழக்கின் இராணுவக் கட்டுப் பாடற்ற பகுதிகளிலுள்ள மக்கள் கடந்த தேர் தலின்போது வாக்களிப்பதற்காகச் செய்யப் பட்ட ஒழுங்குகளே இம்முறையும் செய்யப் படவுள்ளன. கட்டுப்பாடற்ற பகுதிகளிலுள்ள மக்கள் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து வாக் களிக்கும் வகையில் கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும். அவ்வாறான மக்கள் வந்து செல்வதற்குரிய போக்குவரத்து வசதிகளும் செய்யப்படவுள்ளன. அவர்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்த முழு உரிமைகளும், வாய்ப்புகளும் அளிக்கப்படும்.

தேர்தலில் மோசடி, குளறுபடி என்ற பேச் சுக்கே இடமில்லை. மோசடி நடைபெற்றதா கக் கண்டறியப்படும் இடங்களில் மீண்டும் வாக்களிப்பு நடத்த ஏற்பாடுசெய்யப்படும். அந்த இடங்களில் தேர்தலுக்குப் பின் ஒரு நாள் கழித்து 19ஆம் திகதி மீண்டும் வாக்க ளிப்பு நடத்தப்படும். மோசடி, குளறுபடிக ளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப் படும். எனவே, தேவையற்ற நடவடிக்கைக ளில் யாரும் ஈடுபடக் கூடாது. குழப்பம் நடந் தால் மீண்டும் வாக்களிப்பு என்பதை சகல ரும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

**கண்காணிப்பாளர்கள்**

ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பிற்காக தேர்தல்கள் திணைக்களம் உரிய நடவடிக்கை களை எடுத்துள்ளது. வெளிநாட்டுக் கண் காணிப்பாளர்களும் அழைக்கப்படவுள்ளனர்.

உத்தியோக ரீதியிலுள்ள வேலைப்பளு காரணத்தினால் இலங்கை ஜனாதிபதித் தேர் தலின் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட தங்களால் வரமுடியாதென ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பாளர்கள் அறிவித்து விட்டனர். ஆனாலும், பொதுநலவாய ஒன்றி யம், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் கண்காணிப்பாளர்கள் வரவுள்ளனர். இலங் கையின் கண்காணிப்புக் குழுக்களான 'பவ்ரல்' தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற் கான நிலையம் ஆகியவற்றிற்கும் அனுமதி வழங்கப்படவுள்ளது.

**இடம்பெயர்ந்த மக்கள்**

இடம்பெயர்ந்த மக்கள் ஜனாதிபதித் தேர் தலில் வாக்களிக்கக் கூடிய ஏற்பாடுகள் குறித் தும் தேர்தல் திணைக்களம் கவனம் செலுத்தி யிருக்கின்றது. இடம்பெயர்ந்த மக்கள் வாக் காளர் அட்டைகளை பெறுவதற்கான விண் ணப்பங்களை தேர்தல் திணைக்களத்திற்கு அனுப்பவேண்டும். பிரதேச, கிராம செயலா ளர்கள் ஊடாக இதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும். இந்த விடயத்தில் தமிழ் ஊடகங்கள் பெரும் பங்களிப்பைச் செய்து இடம்பெயர்ந்த மக்களை அறிவுறுத்தவேண்டும்.

**17ஆவது திருத்தச் சட்டம்**

அரசமைப்பின் 17ஆவது திருத்தச் சட் டத்தில் பல குறைபாடுகள் இருக்கின்றன. அர சமைப்புச் சபையின் கீழ் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு இன்னும் இயங்கத் தொடங்க வில்லை. அதனால் நான் ஓய்வு பெறமுடியாத நிலை நீடிக்கிறது. தேர்தல் ஆணைக்குழுவுக்கு பல பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன. ஆனாலும் தேர்தல் விடயத்தில் அனுபவம் உள்ள ஒருவரின் பெயர் கூட அதில் இல்லை. ஆகவே அனுபவம் உள்ள ஒருவரையாவது அதற்கு நியமிக்கவேண்டும்.

17ஆவது திருத்தத்தின் கீழ் சரியான சட்டவிதிகள் ஏற்படுத்தப்படவில்லை. தேர் தல் ஆணையாளருக்குத் திட்டவட்டமான அதி காரங்கள் வழங்கப்படவில்லை. அப்படிச் சரியான சட்டங்களை வரையத் தவறிய 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலரே நான் சட்டத்தை சரிவரப் பிரயோகிக்கவில்லை, நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறுகின் றனர். சட்டத்தைச் சரியாக உருவாக்காமல் என் னைக் குறைகூறி என்ன பயன்?

பதவியில் இருந்து செல்லும்வரை எனது பணிகளை சுயாதீனமாக, நேர்மையாக மேற் கொள்வேன்.

ஆழிப்பேரலை தாக்கத்திற்குள்ளான பகு திகளில் வாக்களிப்பு குறித்தும் கவனஞ் செலுத் தப்பட்டுள்ளது. ஆழிப்பேரலை அனர்த்தத் தில் உயிரிழந்தோர், இடம்பெயர்ந்தோர் பற் றிய முழு விவரங்களும் எம்மிடமுள்ளன.

தபால் திணைக்களமும் எமது இந்தச் செயற்பாட்டில் பங்களிப்பைச் செய்கிறது.

-என்றார் தேர்தல் ஆணையாளர். (ஐ-க)

## தனித்திருந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சமயம் வீட்டில் பிரஸ்தாப வயோதிபப் பெண் மாத்திரம் தனியே இருந்து தொலைக் காட்சி பார்த்துக்கொண்டிருந்தார் என்று கூறப் படுகின்றது.

அந்தச் சமயம்பார்த்து வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் பின்புறமாகச் சென்று உலக் கைகளால் அந்தப் பெண்ணின் தலையில் தாக் கியிருக்கின்றனர் எனச் சந்தேகிக்கப்படுகின் றது.

சடலத்தின் அருகே இரண்டு உலக்கைகள் காணப்பட்டன என்று கூறப்பட்டது. சடலத்தில் சங்கிலி, காப்பு போன்ற நகைகள் அபகரிக் கப்பட்டிருந்தன.

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த சிவசுப் பிரமணியம் புனிதவதி (வயது 60) என்ப வரே இவ்வாறு கொலையுண்டவராவார்.

இவரது சடலம் மரணவிசாரணைக்காக யாழ். போதனா மருத் துவமனையில் ஒப் படைக்கப்பட்டது.

சம்பவ இடத்தை நேற்றுமாலை யாழ். மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா சென்று பார்வையிட் டார். கொலைச்சம்ப வம் குறித்து பொலீ ஸார் விசாரணை களை மேற்கொண்டுள் ளனர். வீட்டின் அறை ஒன்றை பொலீஸார் 'சீல்' வைத்துள்ளனர்.

கடந்த சில வாரங் களுக்கு முன்னர் சம் பவம் இடம்பெற்ற வீட்டுக்கு முன் வீட் டில் தங்கியிருந்த வயோதிபமாது ஒரு வரும் கட்டிவைக்கப் பட்டு வீட்டில் கொள் ளையிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கொடூரமான இந்தக் கொள்ளைச் சம்பவம் அந்தப் பிரதேசத்தில் பெரும் பரபரப்பை ஏற் படுத் தியிருக்கின்றது.

(ஐ-15-139)

## படையினரால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டுக்கொல்வோம் எனவும் எச்சரித்தனர் என வும் படையினர் எச்சரித்தனர்.

படையினரின் இத்தகைய நடவடிக்கை தொடர்ந்த வேளையில் அங்கு வந்து சேர்ந்த பெருமளவான மாணவர்களால் கைது செய்யப்பட்ட மாணவன் மீட்கப்பட்டார். இருந்தும் படை யினர் சிங்கள மொழியில் ஏதோ எழுதி கையொப்பமும் வாங்கியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தினை ஒட்டுமொத்த மாணவர்களுக்கும் விடுக்கின்ற சவாலாகவே நாங்கள் பார்க்கின்றோம். மாணவர்களுடைய பண்பையோ பலத்தையோ அறியாதவர் களாய் சிங்கள இராணுவம் இருப்பது வேடிக்கை.

பொங்கு தமிழ் நிகழ்வுகள் ஏற்பாடாகியி ருக்கும் வேளையில் அதனைக் குழப்பும் வகை யிலேயே படையினர் இவ்வாறான அநாகரீகமான செயலைச் செய்திருக்க வேண்டும்.

எழுச்சி கொண்ட மக்கள் சிங்களக் காடையர்களால் தடுத்துவிட முடியாது. சிங்கள இராணுவம் இவ்வாறான செயற் பாடுகளை உடனடியாக நிறுத்தா விட்டால் பாரிய எதிர்விளைவுகளைச் சந்திக்க நேரிடும் - இப்படி அதில் உள் ளது.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மணிமேகலாதேவி மாசிலாமணி

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மணிமேகலாதேவி மாசிலாமணி நேற்று (23.09.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாசிலாமணியின் அன்பு மனைவியும் சாமினி (கனடா), சுதர்ஷன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் உதய குமார், குமுதினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஹரிஸின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.09.2005) சனிக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 4 மணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி.*
*தொ.பே.: 077 6314244* (40337)(30-11-45)

தகவல்:-
மா.சுதர்ஷன்
(மகன்).

### திருமதி சுப்பிரமணியம் புனிதவதி



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் புனிதவதி அவர்கள் நேற்று (23.09.2005) வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆடியபாதம் வீதி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

தகவல்:-
குடும்பத்தினர்.
(40386)(30-11-45)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.